
# நான்காம் அகில வாக்கு மூலத்தில் இருந்து .............

சோவியத் யூனியனில் சரியான கமயூனிசக் கோட்பாடுமற்றும் நடைமுறை மீதும், அதைத் தலைமை தாங்கிய ஸ்டாலின் மீது, டிறொக்சிய, மற்றும் ஏகாதிபத்திய சேறடிப்புகள் ஒருமாதிரி இருந்தன. இந்தப் பொய்களையும், அவதூறுகளையும் இந்தக் கட்டுரை மூலம், ஆதாரத்துடன் அம்பலப்படுத்தும் பணியிலானதே இந்தச் சிறு வெளியீடு.



வெளியீடு- சமர்

வெளியீட்டு இலக்கம்-02

தொடர்பு- **Samer**

**87, Rue de colombes**

**92600 Asnieres sur seine**

**FRANCE**

அடக்கப்பட்ட மக்களது புரட்சிகரமான எழுச்சிக்கு இச்சிறு வெளியீடு சிறிதளவாவது உதவமுனையலாம் என்பது எமது நம்பிக்கை.

உண்மைகள் மறைக்கப்பட்டு, பொய்களும், அவதூறுகளும் மக்கள்மேல் திணிக்கப்படுகின்ற இன்றையநிலையில் மார்க்ஸிய-லெனினிஸியமும் அதன் ஆதரவாளர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களாலேயே திரிக்கப்படுவது வேதனையான விஷயம்.
அதை முறியடிக்கும் ஒரு சிறிய முயற்சியே இவ்வெளியீடு.

எமது தேசியவிடுதலைப்போராட்டத்தை, சமுதாயத்தின் அடுத்தகட்டத்திற்கு நகர்த்தமுனைந்தபோது மக்கள் விரோதிகளால் கொன்றொழிக்கப்பட்ட விசு, ரமணி, விமலேஸ்வரன், ரஜனி...இன்னும் முகம் தெரியாதசிலநூறுபேர்களுக்கு இவ்வெளியீடு சமர்ப்பணம்!

## ஸ்டாலின் பாதுகாத்த பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் மீது, எதிர் புரட்சி சதிக்குழுக்கள் கட்டி அமைத்தது பற்றி நான்காம் அகிலத்தின் வாக்கு மூலங்கள்.

கடந்த காலம் முதல் இன்று வரையிலான பாட்டாளி வர்க்க போராட்ட வரலாற்றில் பல்வேறு முதலாளித்துவ சக்திகள், மார்க்சிய திரிபு வாதிகள், ட்ரொட்ஸ்க்கிய கட்சிகள் ஸ்டாலின் மீதும் பாட்டாளிவர்க்க சர்வதேசக் கோட்பாட்டின் மீதும், அதன் நடைமுறை மீதும் தொடர்ச்சியான பொய்யான பித்தலாட்டத்துடன் கூடிய சேறடிப்புகளை நடத்தி வந்தனர், வருகின்றனர்.

1930களில் நடைபெற்ற மாஸ்கோ வழக்கு பொய்யானவை எனவும், அவை இட்டுக்கட்டப்பட்டவை எனவும் சித்திரவதை மிரட்டல் மூலம் சோடிக்கப்பட்டவை எனவும் 30களில் நடந்த கிரோவ் கொலை ஸ்டாலின் செய்தபின் மற்றவர்கள் மீது சுமத்தியதெனவும், என்னற்ற பொய்கள் அவதூறுகள் மூலம் ஸ்டாலின் மீது, சர்வதேச பாட்டாளி வர்க்கத் தத்துவம் மற்றும் நடைமுறை மீது தொடர்ச்சியாக சேறடிப்பு செய்து வந்தனர், வருகின்றனர்.

இந்நிலையில் 4ம் அகிலத்தின் இலங்கை பிரிவான புரட்சிக் கம்யூனிசக் கழகத்தின் செய்தியேடான தொழிலாளர் பாதை இலக்கம் 16 இல் (19.8.96) வெளியாகிய **'ஸ்டாலினின் பாரிய பயங்கரத்தின் மூலங்களும் விளைவுகளும்'** என்ற

தலைப்பிலான கட்டுரை ஸ்ராலினுக்கு எதிராக செய்த சில சதிகளை ஒத்துக் கொண்டு வெளியாகியுள்ளது. ஒரு ட்ரொட்ஸ்கிய சஞ்சிகையே சதியின் சிலபக்கத்தை தமது சார்பு நிலையில் நின்று ஒத்துக் கொள்வது என்பது, மார்க்சியத்தை வளர்க்கின்றோம் என்று கூறி திரிக்கும் பச்சோந்திகள் இதற்கு என்ன பதில் கூறப்போகிறார்களோ தெரியாது.

இக்கட்டுரை நான்காம் அகிலத்தின் அனைத்துலக பிரிவுகளால் முன்னெடுத்து செயல்படுவதுடன், ரஷ்சியாவைச் சேர்ந்த லடிம் றொ கோலினால் 4ம் அகிலம் ஒழுங்கு செய்த பல கூட்டத்தில் பேசப்பட்ட விடையத்தை உள்ளடக்கியதேயாகும். அத்துடன் இவ்வாசிரியர் ஸ்டாலினை எதிர்த்து 4ம் அகில ட்ரொட்ஸ்கிய நோக்கில் ஆறு புத்தகங்களைக் கொண்ட ஒரு நூல் தொகுப்பை வெளியிட்டுள்ளனர். இதன் முழுமை, முழுமையான சதியை நியாயப்படுத்தும் போது, சதியை கோட்பாட்டு அடிப்படையில் நாம் புரிந்து கொள்ள முடியும். நாம் அவரின் பேச்சில் இருந்து சில பகுதிகளை இக்கட்டுரை மூலம் ஆராய முற்படுகிறோம். நான்காம் அகிலத்தினர் கூறுகின்றனர்.

'....... நாம் இவ்வாய்வை சரியான முறையில் அணுகுவதென்றால் அதாவது ஸ்டாலின் ஏன் இக்களையெடுப்பைச் செய்ய வேண்டி இருந்தது என்பதற்கான சரியான காரணம் சோவியத் யூனியனுக்கும் அதற்கு வெளியிலும் கம்யூனிச இயக்கத்திற்குள் ஸ்ராலினுக்கு எதிராக வளர்ந்த எதிர்பாகும்' என 4ம் அகிலக் கட்டுரை குறிப்பிடுகிறது.

கம்யூனிச இயக்கத்திற்குள் இருந்த எதிர்ப்பென்பது என்ன? அது எப்போதும் ஒரு வர்க்கப் போராட்டமேயாகும். இதை எப்போதும் எல்லா ட்ரொட்ஸ்கியவாதிகளும், திரிபுவாதிகளும் மறுக்கின்றனர். அதாவது ஒரு புரட்சிக்குப் பிந்திய கம்யூனிச இயக்கத்தில் வர்க்கப்போராட்டமே பிரதான அடிப்படை என்பதை மீள மீள மறுக்கின்றனர். அதை மறுத்தபடி இது ஒரு தனிநபர், குழுசார்ந்த விடையமாக காட்டுவதன் மூலம் அதன் வர்க்க அடிப்படையை நிராகரிக்கும் போக்கு சொந்த அரசியல் வர்க்க முகத்தை மூடிமறைக்கம் கபடதாரிகளின் மோசடியாகவே எப்பொதும் இருந்துள்ளது. இனி நாம் ஸ்ராலின் எதிர்ப்பு என்று எதை 4ம் அகிலம் கூறுகின்றது எனப்பார்ப்போம்.

'இதைக் கவனத்தில் கொண்டு நான் சுருக்கமாக மிக முக்கியமான ஆண்டான 1932 தொடர்பாக கூறவிரும்புகிறேன். இந்தவருடம் ஸ்ராலின் குழுவினரின் அரசியலின் விளைவாகப் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கிய வருடமாகும். நாட்டின் பலபாகங்களிலும் முக்கியமாக உக்கிரேனிலும் வடகல்கசாவிலும் சிறு அளவிலான உள்நாட்டு யுத்தம் ஒன்று நடந்து கொண்டு இருந்தது. இவ்விளைவில் விவசாயிகளுக்கு எதிராக இராணுவத்தை நிலைகொள்ளச் செய்ய வேண்டியதோடு பீரங்கி, டாங்கிப் படைகளை பிரயோகிக்க வேண்டியிருந்தது. ......... ............ இந்த

நிலைமைகளின் கீழ் இதுவரை தலைமறைவாக இயங்கி வந்த சில எதிர்ப்புக் குழுக்களின் நடவடிக்கைகள் மீண்டும் புத்துயிர்படைந்தன. அவர்கள் ஸ்ராலினுக் கெதிரான போராட்டத்திற்காக ஒன்றுபடுவதற்காக சில திட்டவட்டமான முயற்சிகளை செய்தனர். ..........» என 4ம் அகிலப் பத்திரிகை தமது சதியை அழகாக் குறிப்பிடுகின்றனர். 1932 இல் உள்நாட்டு நெருக்கடி என்ன எனப்பார்ப்போம். 1930க்கு முன்பின் விவசாய நிலத்தை கூட்டுடமையாக்கும் சோசலிச நிகழ்ச்சிகளின் விளைவாக 1932இல் சில நெருக்கடிகள் ஏற்பட்டன. நிலப்பிரபுக்களும் மற்றும் குல்லாக்களும், அவர்கள் சார்ந்த பிரிவுகளும் நிலக்கூட்டுடமைக்கு எதிராக கலகம் செய்தன. கட்சி சிலபகுதிகளில் வேகமான கூட்டுப் பண்ணையாக்கல் மூலம் விட்ட சில இடது தவறுகளை, பயன்படுத்தி நிலப்பிரபுக்களும் குல்லாக்களும், தலைமைமறைவாக இருந்த முதலாளித்துவ மீட்சிக்கான குழுக்களும் கலகத்தில் இறங்கின. இக்கலகத்தில் கட்சி தனது இடது தவறைத் திரித்தியதுடன் நிலப்பிரபுத்துவச் சக்திகளை ஒடுக்கியதும் அறிந்ததே.

ஆனால் இந்த இடது பிரிவான ட்ரொட்ஸ்கிய, மற்றும் வலது பிரிவான காமனெவ், புக்காரின் போன்றோர் கட்சிக்கு வெளியிலும் உள்ளும் இருந்து சதிப்பணியில் இரகசியக் குழுக்களை அமைத்து நிலப்பிரபுக்களினதும் குல்லாக்களினதும் போராட்டத்துடன் கைகோர்த்து பாட்டாளி வர்க்க அரசை எதிர்த்தனர். அதை இக்கட்டுரையில் 'இந்த நிலமைகளில் இதுவரை தலைமறைவாக இயங்கி வந்த சில எதிர்ப்புக் குழுக்களின் நடவடிக்கைகள் மீண்டும் புத்துயிர்ப்பு அடைந்தன. அவர்கள் ஸ்ராலினுக்கு எதிராக போராட்டத்திற்காக ஒன்றுபடுவதற்காக சில திட்டவட்டமான முயற்சி செய்தனர்.' என 4ம் அகிலம் வாக்கு மூலம் தந்துள்ளனர். இங்குதான் ஸ்டாலின் எதிர்ப்பு எது என்பது தெளிவாகின்றது. ஸ்டாலினின் எதிர் நடவடிக்கை நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ பிற்போக்குப் பிரிவுகளை எதிர்க்கும் எல்லைக்குள், அதைத் தாங்கி நின்ற பிரிவுகள் மீது நிகழ்த்தப்பட்டது என்பதை மறைமுகமாக 4ம் அகிலக் கட்டுரை தெளிவாக்கின்றது. இக்குழுக்கள் சில சோசலிச மயமாக்கலை திட்டவட்டமாக எதிர்த்தன. கூட்டுடமையாக்கல் தவறானது எனவும், தனியார் உற்பத்தி தொடர்ந்து இருக்க வேண்டும் என்று பிரகடனம் செய்தனர். கூட்டுடமையாக்கல் தனிநாட்டு சோசலிசத்தை கட்டும் பணியில் அமைந்தது எனவும், இது சர்வதேசியத்திற்கு எதிரானது எனப்பிரச்சாரம் செய்ததுடன், அதைப் பலாத்காரமாக அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இதை மேலும் விரிவாக4ம் அகிலம் கூறுவதைப் பார்ப்போம்.

'............ தனது இடது வலது எதிர்ப்புக் குழுக்களுடனான அரசியல் சித்தாந்த முரன்பாடுகளை தீர்த்துக்கொள்வதற்காக .............. ........ 1932ம் ஆண்டளவில் இடது வலது எதிர்ப்பாளர்களிடம் இருந்த முரண்பாடுகள் விலக்கப்பட்டிருந்தன அல்லது ஓரளவு சுமகமாக இருந்தன. முக்கிய புரட்சிகர எழுத்தாளரான VICTOR SERGE

நாடுகடத்தப்பட்ட பின் ஐரோப்பாவிற்கு வந்த பின்னர் தான் பல முன்னைநாள் வலது எதிர்ப்பாளர்களை சந்தித்ததாகவும், புக்காரின் ஆதரவாளர்கள் அப்போது அவர்கள் லியோன் டிரொட்ஸ்கி தொடர்பாயும் இடது எதிர்ப்பாளர்கள் தொடர்பானதுமான அவர்களது அணுகுமுறை கணிசமான அளவு மாறியுள்ளதாக கூறியதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.' என்று 4ம் அகிலம் முன்னைய வலதுடன் கூடிய பற்றிய வாக்கு மூலத்தை ஆராய்வோம். ஸ்ராலின் பிரயோகித்த சில நடவடிக்கையே வலது இடதை 1932இல் ஒன்றினைத்தது என 4ம் அகிலம் குறிப்பிடுகின்றது. 1932லும், 32க்கு முன்பும் கட்சியில் இருந்த குழுக்கள் இரகசியமாகவும், பகிரங்கமாகவும் சதி செய்த போதும் ஸ்ராலின் எதிர்தாக்குதலை செய்ததாக எந்த ஆதாரத்தையும் கடந்த காலத்தில் காட்ட முடியாது போயுள்ளனர். அதனால் தான் இவர்கள் கட்சியின் பல பிரிவுகளில் முன்னணிப் பொறுப்புக்களில் இருந்ததுடன் மட்டுமின்றி பலர் விலக்கப்பட்டு பின் தவறை உணர்ந்து திருந்தி தமது தவறை ஒத்துக்கொண்ட மீளக்கட்சியில் சேர்க்கப்பட்டதும், அதைவிட தொடர்ந்து அப்பட்டமான எதிர்ப்புரட்சியைச் செய்தவர்களுக்கு குறைந்த பட்ச தண்டனையும் வழங்கப்பட்டு இருந்தன. ஆனால் 4ம் அகிலம் தனது வலது இனைப்புடன் இனைந்த அரசியல் அடிப்படையை நியாயப்படுத்த ஸ்டாலினின் பூச்சாண்டி தேவையாகவுள்ளது. அதுசரி வலது, இடது இனைப்பிற்கிடையில் என்ன அரசியல் உண்டு எனப் பார்ப்பின் பாட்டாளிவர்க்க சர்வதேசியத்தை புறந்தள்ளுவது மட்டுமே ஒரு பொது வேலைத்திட்டமாக அமையமுடியும். ஸ்ராலின் கால கட்சி முன்னெடுத்த பொதுவான பாட்டாளி வர்க்க திசைமார்க்கத்தை மறுத்து ஒருக்காலும் வேறு ஒரு பாட்டாளிவர்க்க திசைமார்க்கத்தை வைக்கும் அருகதை இன்றுவரை இவர்களுக்குக் கிடையாது. மாறாக இவர்கள் முன் இருந்தது முதலாளித்துவ மீட்சி நோக்கிய பாதை ஒன்று மட்டுமேயாகும். அது இன்று கேள்விக்கு இடமின்றி மீள மீள நிறுவ முடியும்.

4ம் அகிலக் கட்டுரையில் புரட்சிகர எழுத்தாளர் VICTOR SERGE பல முன்னைநாள் வலது எதிர்ப்பாளர்களை சந்தித்து இடதுடன் ஒன்றினைத்தார் என்கின்றனர். ஒரு புரட்சிகர எழுத்தாளர் எப்படி முன்னைநாள் வலதுகளைச் சந்தித்து ஒன்று இனைக்கும் அந்தப் புரட்சிகரத் திட்டம் தான் என்ன? எல்லாமும் முதலாளித்துவ மீட்சிக்கான திட்டமேயாகும். இங்கு புரட்சிகரம் அல்ல எதிர்புரட்சிகரமே அவரின் எழுத்து என்பதை அவரின் சகபாணிகளான முன்னைநாள் வலதுகளின் கூட்டு அத்தாட்சிப்படுத்துகிறது. மேலும் எப்படி சதியைத் திட்டமிட்டு கூட்டினர் என்பதை 4ம் அகில வாக்குமூலத்தில் இருந்து பார்ப்போம்.

'1932ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் புகாரின் ஆதரவாளர்கள் மொஸ்கோவில் ஒரு மாநாடு கூட்டி ஸ்ராலினை எவ்வாறு எதிர்ப்பது என்பது தொடர்பாக ஆராய்ந்தார்கள்.

3வருடங்களுக்கு முன்னர் 1932ம் ஆண்டில் இளமையான மிகப் பிரபல்யம் அற்ற புகாரின் ஆதரவாளரான இப்போது 95 வயதுடைய VALENTIN ASTROV (தற்போது உயிருடன் உள்ளார்) இனை சந்திக்கக் கூடியதாக இருந்தது. முதலாவது இளம் வயது எதிர்ப்பாளர்களின் கூட்டம் இவரது வீட்டில் நடந்தது. அத்துடன் அவர்கள் ஸ்ராலினை பலாத்காரமாக தூக்கி எறியவேண்டியது தொடர்பாக பகிரங்கமாக கலந்துரையாடியதை மிகவும் ஞபகத்தில் வைத்திருந்தார். அவர் தனது தோழர்களுக்கு ஸ்ராலினுக்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொள்ள விரும்பவில்லை எனக் கூறியதால் அடுத்த கூட்டம் வேறு ஒரு இடத்தில் அவர் கலந்து கொள்ளாமலேயே நடந்தது. பின்னர் VALENTIN ASTROV, NKVD இனரால் கைது செய்யப்பட்ட போது இந்த இடங்களில் அவ்வப்பொது நடந்த கூட்டங்களில் என்ன விவாதிக்கப்பட்டது என விசாரனையாளர்கள் கேட்ட போது VALENTIN ASTROV தனக்கு இப்படியான கூட்டங்கள் தொடர்பாக எதுவும் தெரியாது என பதிலளித்தார்.

இதேவேளை பல இடது எதிர்ப்பாளர்கள் இவர்களில் எற்கனவே பணிந்து போன பலருடன் தாமும் இணைந்து போராட்டத்தில் இருந்து விலகிக் கொண்டனர். இவர்களில் முக்கியமானவர்கள் Ivan Njkjtovich, smirnov வின் குழுவைச் சேர்ந்தவர்களாகும். நாங்கள் இவர்களில் இருந்து 5 தடவை கைது செய்யப்பட்ட பெண் ஒருவரின் மகளிடம் இருந்து இவைதொடர்பான தகவல்களை ரஷ்ய வெளியீடான இரு தொகுதிகளைப் பெற்றோம். Tatjana Mjagkova இன் மகள் எவ்வாறு இவ் இடது எதிர்ப்பாளர்களின் அங்கத்தவர்கள் தனது தாயின் வீட்டில் ஒன்று கூடினர் என்பது தொடர்பாகக் கூறினார். இக்கூட்டத்தில் சினோவியேவ், காமனேவ் தாங்கள் ஸ்ராலினை அகற்ற வேண்டிடும் என்பதில் உடன்படுவதாகவும், ட்ரொட்ஸ்கியுடன் தொடர்பேற்படுத்த வேண்டியதையும் ஏற்றுக் கொண்டனர். அவ்வேளை அவர்கள் தாம் 1917ல் விட்ட தவறை விட பெரிய தவறு 1927இல் இடது எதிர்ப்பாளருடன் பிரிந்து போனது தான் என குறிப்பிட்டனர். 1932 முழுவதும் இவ் எதிர்ப்பாளர் மத்தியில் எவ்வாறு பொதுவான ஸ்ராலின் எதிர்ப்புக் குழு ஒன்றைக் கட்டுவதென்பது தொடர்பான கலந்துரையாடல்கள் நடந்தன. இதற்கு முன் 1931ம் ஆண்டு Smirnov பேர்லினுக்கு உத்தியோகபூர்வமாக வந்த போது ட்ரொட்ஸ்கியின் மகனான லியோன் சடோவை சந்திக்கக் கூடியதாக இருந்தது. அவர்கள் ட்ரொடஸ்கிக்கு சோவியத் யூனியனில் உள்ள எதிர்ப்பாளர்களுக்கும் இடையில் சேர்ந்து வேலை செய்வது தொடர்பாகவும், Smirnov விற்கும் ட்ரொடஸ்கிக்கும் இடையில் விடையங்களைப் பரிமாறிக் கொள்வது தொடர்பாக கலந்துரையாடினர். இந்நிலையில் இருந்து ட்ரொட்கிஸக்கம் சடோவிற்கும் (ட்ரோடஸ்கியின் மகன்) சோவியத் யூனியனில் இருந்த பல எதிர்ப்புக் குழுக்களுக்கும் இடையில் இறுக்கமான தொடர்பு ஏற்பட்டது. ............. ............

அமெரிக்க வரலாற்று ஆசிரியரான J.Archgettve, பிரான்ஸ் வரலாற்று ஆசிரியரான Pierre Broue ஆகியோரே 1932 நிகழ்வுகள் தொடர்பாக முதலாவதாக எழுதியவர்களாவர். ...... ...... Pierre Broue கூறியது போல் அவ்வழக்கு கூறப்பட்ட எதிரானவர்களிடையே கூட்டங்கள் கலந்துரையாடல்கள் உண்மையில் நடந்தது என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதைவிட ட்ரொடஸ்கியின் மகனான லியோன் சடோவ் ஆல் எழுதப்பட்ட பிரசித்தி பெற்ற செம்புத்தகம் The Red Bookல் 'உண்மையில் என்ன நிகழ்ந்தது' என்ற அத்தியாயத்தின் கீழ் எழுதியள்ள இக் கூட்டங்கள் தொடர்பான கருத்துக்கள் இதனை உறுதியாக்கின்றது. அவராலும் சகல நிகழ்வுகளை எழுத முடியாது இருந்ததுடன் அப்புத்தகம் எழுதப்பட்ட வேளையில் அப்படி சகலவற்றையும் எழுதாமல் இருக்க வேண்டியும் இருந்தது. உதாரணமாக லியோன் ட்ரொடஸ்கிக்கும், லியோன் சடோவுக்கும் இடது எதிர்ப்பாளர்களுக்கும் இடையே முக்கிய தொடர்பாளராக இருந்தவரான Yuri Gavan ஒரு பழைய போல்சுவிக் ஆவார். இவரின் பெயர் மொஸ்கோ வழக்கில் பலதடவை குறிப்பிடப்பட்ட போதும் அவ்வழக்குகளில் சாட்சியாகவோ அல்லது குற்றவாளியாகவோ தோன்றாததுடன் தண்டனைக்குள்ளானவர்களிலும் அவர் இருக்கவில்லை. ட்ரொட்ஸ்கியும், சடோவும் GPU ஆல் அவரை அடையாளம் காண முடியவில்லை என்ற முடிவிற்கு வந்தனர். நான் உதாரணம் ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன் ட்ரொடஸ்கி நோர்வேயில் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டிருந்த போது, அப்போது தான் முதலாவது மொஸ்கோ வழக்கு நடந்து கொண்டிருந்தது. லியோன் சடோவ் அவருக்கு ஒரு கடிதம் அனுப்ப முயன்றார். ....... ......... அவர் அக்கடிதத்தில் சதியாளர்களான Smirnov, Gaven போன்றவர்கள் தொடர்பாகக் குறிப்பிடுகின்றார். நாங்கள் இவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும். ..... ....... ..... மிகவும் கவனிக்க வேண்டியது என்னவெனில். 1932ல் பல எதிர்ப்புக் குழுக்கள் இயங்கிக் கொண்டிருந்த போது இக்குழுக்களில் இருந்து பலர் 1932-33 இல் கைது செய்யப்பட்டிருந்த போது 1932ல் இப்படியான குழுக்கள் இருந்தன என்பதற்கான எந்தவொரு சாட்சியையும் விசாரணையாளர்களால் கண்டுபிடிக்க முடியாதிருந்தது. இதற்கான காரணமாக 1935-36 வரை இக்குழுக்களைச் சேர்ந்த ஒரு தொகையினர் சுதந்திரமாக உலாவ முடிந்தது.......... ....1932ம் ஆண்டு விசாரணையாளர்களுக்கு எதிரானவர்களின் குழுக்களில் ஒரு பிரிவு மட்டுமே இருப்பதாக அறியக் கூடியதாக இருந்தது. அக்குழுவில் ஒரு பிரிவுதான் ரீயூற்றின் குழுவாகும். ......... ....... 1927ம் ஆண்டு ரீயூற்றின் ஒரு உறுதியான ஸ்ராலினிஸ்ட் ஆவர். மொஸ்கோவில் நடந்த இடது எதிர்ப்பாளர் கூட்டங்களை கலைப்பதற்கு அவரே தலைமை தாங்கியுள்ளார். 1928ம் ஆண்டு ஸ்ராலினின் அங்கும் இங்கும் செல்லும் அரசியலுக்கு எதிரான வலது எதிர்ப்பாளர்களின் மொஸ்கோ கட்சிக் குழுவின்

தலைவர்களில் ஒருவராக இருந்தார். 1930ல் ரீயூற்றின் பழைய போல்சுவிக்குகளுடன் இணைந்து ஸ்ராலினுக்கு எதிராக இயங்கவேண்டும் என்ற நிலையில் இருந்தார். 1932ம் ஆண்டு ஆண்டு மக்சிய லெனினிச கூட்டமைப்பின் நிறுவனராகவும் இருந்தார். இவர் இக்குழுவால் எற்றுக் கொள்ளப்பட்ட 100பக்கங்கள் அடங்கிய முன்நோக்கின் பெரும்பகுதியை எழுதியதுடன் இதன் தலைவராகவும் இருந்தார்.......... .....அதாவது இன்று கட்சியைப் பிரிவு படுத்தும் புதிய பிரச்சனையின் முன்னே பழைய எதிர்ப்பு வாதிகளிடையே இருந்த முரன்பாடுகள் களையப்பட்டு விட்டன. ........ ........ ரீயூற்றனின் முன்நோக்கு ஸ்ராலினுக்கு எச்சரிக்கையாக இருந்ததுடன் மிகுந்த பயத்தினை அளித்தது. இதன் விளைவாக இதனை மத்தியகுழு அங்கத்தவர்களுக்கு இதனை விநியோகிக்காமலும் ஒரு மத்திய குழுக் கூட்டத் தொடரில் ரீயூற்றனைக் கண்டித்தார். ஆனால் இவ்வெதிர்ப்பு இயக்கத்தின் முழு அளவிலான நடவடிக்கைகள் தொடர்பாக 4 வருடங்களின் பின்னர் 1936ம் ஆண்டே தெளிவாகத் தெரியவந்தது....... .......1937இல் ஸ்ராலினுக்கு எதிராக ஒரு இராணுவ சதி நடந்ததா இல்லையா என்பது தொடர்பாக விவாதிக்க விரும்புகிறேன். (இதை தனது புத்தகத்தில் பார்க்கக் கோருகின்றார்)' என நான்காம் அகில நீண்ட மேற்கோள்களை வாசகர் சுயமாகப் புரிந்து கொள்ள நாம் எடுத்துக்காட்ட வேண்டியதாயிற்று.

4ம் அகில இந்த வாக்கு மூலம் மிகத் தெளிவாக சோவியத்தில் ஒரு எதிரணி உருவானதையும், அவர்கள் தமக்கிடையில் இருந்த முரன்பாடுகளை ஒதுக்கி வைத்து ஒரு பொது வேலைத்திட்டத்திற்குள் வந்ததையும் அதை சதிப்பாணியில் பலாத்காரமாக கவிழ்த்துவிட முயன்றதை முதன் முதலில் 4ம் அகிலம் ஒத்துக் கொண்டுள்ளது. இக்கட்டுரையில் உள்ளபடி சதியில் முதல்பங்கு கொள்ள சம்மதித்து பின் விலகிக் கொண்டவர்கள் தண்டிக்கப்படாததையும், மாற்றுக் கருத்து முன்வைக்கக் கூடிய நிலை (முன்வைக்கப்பட்ட ரியூற்றன் திட்டம்) அங்கு இருந்ததையும் அதை ஸ்ராலினுக்கு நேரடியாகக் கொடுக்கும் நிலை இருந்ததையும், 1936 வரை சதி பற்றி பெரிதாகக் கண்டு பிடிக்கப்படாததையும் இக்கட்டுரை தெளிவாக்கின்றது. அரசின் உயர் பதவிகளிலும் மத்திய குழுவிலும் இருந்த இவர்கள் சதிப் பாணியில் நடத்திய சில நடவடிக்கைகளை மேலும் கட்டுரையில் தர முயல்கிறோம். வலது, இடது கோட்பாடுகள் எப்போதும் பூர்சுவா வர்க்கம் சார்ந்த மார்க்சிய விலகளுடன் கூடிய திரிபாகும். இந்த வலது இடது எதிர்ப்பாளர்கள் கட்சியின் வரலாற்றுடன் அதன் போக்குடன் வளர்ச்சி பெறுவதும் வலதை எதிர்க்கும் போது இடது தன்னைப் பாதுகாத்து கொள்ளலல். இடது எதிர்ப்புக்குள்ளானால் வலது தன்னை (உ-ம் ரியுற்றன்) மறைத்து பாதுகாத்து கொள்வதும் சோவியத் வரலாறு முழுக்க நீடித்ததைக் காட்டுகிறது. இது சீன வரலாற்றில் நிறுவியுள்ளது. இவ் 4ம் அகிலகட்டுரை

சதிகளும் இரகசிய நடவடிக்கைகளும், கூட்டங்களும் நடந்தது என்பதை முதன் முதலில் அப்பட்டமாக எற்றுக் கொள்ள வேண்டும். என 4ம் அகிலக் கட்டுரை மீள மீளக் கோருவதென்பது வரலாற்றில் அதை மறுத்து வந்த பொய்மை புலப்படுகிறது. இந்த வலது, இடது குழுக்களின் நடவடிக்கை வெறும் நபர்களின் சதியல்ல. மாறாக ஒரு வர்க்கக் கண்ணோட்டத்துடன் கூடிய ஒரு அரசியல் சதியாகும்.இவைகளை மேலும் நாம் புரிந்து கொள்ள ட்ரொட்ஸ்கியின் வாழ்க்கை வரலாறு – கதிர் இராமசாமியின் புத்தகத்தில் இருந்து பார்ப்போம். இப்புத்தகம் ட்ரொட்ஸ்கியை உயர்த்தி அவரை நியாயப்படுத்தும் புத்தகம். அதில் அன்று (1918ல்) தென்பிராந்தியமே எதிரிகளின் (வெண்கலர் படைகளின்) கோட்டையாக இருந்தது. தென் திசையில் நிறுவப்பட்டிருந்த செம்படைகளின் வலிமை மிகுந்த தளபதி வரலோறிலாலின் 10வது இராணுவமே. வரலோறிலால் தனது படைகளை ரொட்கியின் இராணுவ அமைப்புத் திட்டப்படி சிரமைக்க மறுதலித்துவிட்டார். ......... .......... ஸ்ராலின் சில மாதங்கள் இந்த தலைமையகத்தில் தங்கியிருந்து வரலோறிலாவுக்கு முழு ஆதரவையும் அளித்துவந்தார். ...... ........ சிறிது காலம் ஸ்ராலின் தென்மண்டல அரசியல் கொமிஸராக தற்காலிகமாகப் பணியாற்றினார். .... ........ .... இந்த வரோறிலால் தகாறினுக்கு முடிவு காணவேண்டும் எனக் கருதிய டிரொட்ஸ்கி இராணுவ ஜெனரலான தளபதி சைட்டினை தெற்குப் போர்முனையில் தளபதியாக அக்டோபர் 1918ன் ஆரம்பத்தில் நியமித்தார். அவரின் கீழ் செயலற்றும்படி வாரோலுனானைப் பணித்தார். .......... அத்துடன் தென் மண்டலப் போர்முனைக்கும் புதிய புரட்சிகர இராணுவக் கவுன்சில் ஒன்றையும் நியமித்து, தென் மண்டலத்துக்கும் பிரதம கொமிசராக ஸ்ராலினுக்கும் பதில் ஸ்லையபிநிக் கோலை நியமனம் செய்தார். இராணுவக் கட்டுப்பாடுகளை மீறும் தளபதிகளும் கொமிஸார்களும் இராணுவ நீதிமன்றத்தில் விசாரணைக்கு நிறுத்தப்படுவார் (ஸ்ராலின் ......... மற்றவர்களையும்) களென்றும் எச்சரித்தனர். ........... இதையடுத்து லெனின் ஸ்ராலினை மொஸ்கோவுக்கு அழைத்து வந்தார். ..... ட்டிரொட்ஸ்கி வரோல்லாவைக் கண்காணிக்க 10வது இராணுவத்தின் தலைமையகத்தில் ஒகுலால் என்பவரை நியமித்தார். ......... பின்னர் வரோவுலாவைப் பதவி இறக்கம் செய்து உக்கிரேனுக்கு மாற்றும் படியும், 10வது இராணுவத்துக்கு புதிய கொமிஸர்களை நியமிக்கும் படியும் டிரொட்ஸ்கி லெனினைக் கேட்டுக் கொண்டார். லெனின் இணங்கினார். வாரோவுலால் உக்கிரேனுக்கு மாற்றப்பட்டார். இங்கு ஸ்டாலின் வாரோசிலால் கோஸ்டி முழு இராணுவ நடவடிக்கைகளையும் குற்றுயிராக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக டிரொடஸ்கி 19.1.1919இல் லெனினுக்கு தெரிவித்தார். அடுத்து வரோசிலால் தலைமையில் உக்கிரேன் படைப்பிரிவேன்றை அமைக்கவேண்டாம் என்று கோரிக்கை விடப்பட்டது. இக்கோரிக்கையை லெனின்

ட்டிரொட்ஸ்கிக்குத் தெரிவித்தார். அவர் அதற்கு இணங்கவில்லை. ......... டிரொட்ஸ்கி எதிர்ப்பதால் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாக கட்சியின் அரசியல் குழு வரோசிலாலுக்கு தெரிவித்தது. ஸ்ராலின் கிராட்டிக் செய்வதைப் போல உக்கிரேனிலும் எதிர்ப் படைகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட இராணுவ சப்பிளைகளை வாரோசிலால் தனது படைகளுக்கு மட்டும் பயன்படுத்துகின்றார் என்றும், அதன் சப்பிளைகளை இதர போர்முனைகளும் விநியோகிப்பதற்காக ........... செய்யும்படி கட்சிமத்திய குழுவிடம் டிரொடஸ்கி கேட்டுக்கொண்டார். ........... எஸ் காமனேவ் என்பவர் கிழக்குப் போர் முனையின் தளபதியாக நியமிக்கப்பட்டிருந்தார். அவர் எப்ரலில் கிழக்குப் போர்முனையில் ஒரு திடிர் தாக்குதலை நடத்தி கோல்சாக்கின் வெண்காலன் படைகளை பின்னடையச் செய்தார். அந்தப்படைகளை ஊரலை நோக்கி சிதறி ஓடின. பின்வாங்கும் கோல்சக் படைகளை சைபிரியாவுக்கும் துரத்திச் செல்லும் ஒரு திட்டத்தைதயாரித்தார் எஸ் காமனேவ். .......... ஆனால் பிரதம தளபதி லட்ஜெட்டிஸ் எஸ்காமனேவின் திட்டத்தை இரத்து செய்தார். ஆனால் எஸ்காமனேவ் பிரதம தளபதியின் கட்டளையை மீறி தனது திட்டத்தை வற்புறுத்தியதால் அவரைப் பதவி நீக்கம் செய்தார் டிரொட்ஸ்கி. கிழக்குப் போர்முனையில் பணியாற்றிய மூன்று தளபதிகள் அவரைப் பதவியில் அமர்த்த வேண்டும் எனவும், திட்டத்தை அமுல்படுத்தக் கோரியும் கிளர்ச்சி செய்தனர். இவர்களை ஸ்ராலின் ஆதரித்து நிற்கின்றார். ஸ்ராலினின் ஆட்கள் சில சதிகள் செய்து (டிரொட்ஸ்கி கூறுகின்றார்) லெனினின் சம்மதத்துடன் திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இப்படை நடவடிக்கை அப்படைகளை முற்றாக ஒழித்துக்கட்டி எதிரிகளும் முற்றாக ஒழித்துக்கட்டப்பட்டனர். இது டிரொட்ஸ்கிக்கு ஏற்பட்ட ஒரு தோல்வியாகும்.

டிரொட்கியை எதிர்ப்பவர்களுடன் சேர்ந்து எடுத்த சில சதி நடைவடிக்கைகளின் விளைவாக (இச்சதியில் லெனினும் கலந்து கொண்டார் எனக் கட்டுரையாளர் கருதுகின்றார்.) மத்திய குழு வட்ஜெட்டியை பிரதம தளபதிப் பதவியில் இருந்து நீக்கி விட்டு, எஸ்.காமனேலை அப்பதவிக்கு நியமித்தது. அத்துடன் யுத்தக் கவுன்சில் உறுப்பினர்களில் டிரோட்ஸ்கி ஆதரவாளர்கள் மூவரை நீக்கிவிட்டு எஸ். காமனேலின் ஆதரவாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

............ இந்த நடிவடிக்கையை அடுத்து டிரொட்ஸ்கி கட்சி அரசியல் குழுவிலிருந்தும், யுத்த மக்கள் கமிஸர் (அமைச்சர்) பதவியிலிருந்தும், புரட்சிகர யுத்தக் கவுன்சில் தலைமைப் பதவியிலிருந்தும் விலகிவிட்டார். ...... சோவியத் அரசாங்கம் டிரொட்ஸ்கியின் பணியை இழக்க முடியாதென்றும், எக்காரணத்தை முன்னிட்டும் அவரது ராஜினாமாவை ஏற்க வேண்டாம் என்றும் லெனின் அரசியற் குழுவை வற்புறுத்தினார். அரசியற் குழு அவரது ராஜினாமாவை நிராகரித்து விட்டது. .............. ராஜினாமா சம்பந்தமாக மிகவும் மனவேதனை அடைந்திருந்த லெனின் டிரொட்ஸ்கி மீது

நம்பிக்கையை உறுதிப்படுத்தும் ஓர் அடையாளமாக டிரொட்ஸ்கி பிறப்பிக்கும் எந்த உத்தரவையும் தான் முற்றாக ஏற்று அங்கீகரிப்பதற்கான எழுதிநிரப்பப்படாத தமது 'எற்பு –இசைவுப் பத்திரத்தை' டிரொட்ஸ்கியிடம் கொடுத்தார். (இதன் மூலமே டிரொட்ஸ்கியின் பிளவை அன்று லெனின் தடுத்தார்.) இந்த நிரப்பப்படாத கையெழுத்துள்ள வெள்ளைக் கடிதத்தின் ஆதாரத்தின் மீதே டிரொட்ஸ்கி பதவிகளில் நீடிக்க இணங்கினார். ............ டிரொட்ஸ்கி பெட்ரோகிராடுக்குச் சென்றபோது தான் ஸ்ராலின் தற்காலிகமாக தெற்குப் போர் முனைக்கு பொறுப்பாக அனுப்பப்பட்டார்.» என்று நீண்ட டிரொட்ஸ்கிய வரலாற்றுச் சார்புக் கட்டுரையில் அங்கு இருந்த சில முரண்பாடுகளை தமக்குச் சார்பு நிலையில் நின்று தெளிவாக்குகின்றது. இந்த யுத்த கால நிகழ்வுகளில் நீண்ட பாரம்பரியத்துடன் வளர்ந்த போல்சுவிக்குகளின் மீது ஒரு வருடத்தில் கட்சியில் இணைந்திருந்த டிரொட்கி எப்படித் தனது ஆட்சியை நிறுவ முயன்றார் என்பதை தெளிவாக்கின்றது. பாரம்பரிய போல்சுவிக்குகளின் போர் குணாம்சத்திற்குப் பதில் தனக்கு சார்பானவர்களை கட்சி, முன்னணி அமைப்புகளில் நிரப்புவதன் மூலம் ஒரு பாட்டாளி வர்க்கத்திற்கு எதிரான ஒரு ஆட்சியை மேலிருந்து கைப்பற்ற முயன்றான் டிரொட்ஸ்கி. ஸ்ராலினுக்கு இராணுவ தொடர்புகளோ, அல்லது உள்நாட்டு யுத்தத்தில் பங்கு பெறவில்லை என்ற கடந்தகால டிரொட்கிய பொய் பித்தலாட்டங்களை இந்த டிரொட்ஸ்கிய வரலாறு ஓரளவுக்கு தம்மை நியாயப்படுத்த முனைந்த போக்கில் ஒத்துக் கொண்டுள்ளது. இனி டிரொடஸ்கி எப்படி போல்சுவிக் கட்சியில் இனைந்தான் என நாம் பார்ப்போம். அவன் தனக்கான ஒரு குழுவை கட்சிக்கு இட்டுச் செல்ல முன்பு எந்த ஒரு கட்சியையும் கொண்டிராத ஒரு தனியாள் டிரொட்ஸ்கி. 1917களில் சோவியத்துக்கு ஒரு குழுவைக் கண்டுபிடித்து அதனுடன் சேர்ந்து பின் போல்சுவிக் கட்சிக்குள் இணைந்ததை இந்த ரொடஸ்கிய வரலாறு நூல் கூறும் வழிகளில் ஆராய்வோம். 'டிரொட்கி 1917 மே 4ம் திகதி ரஸ்சியா வந்து சேர்ந்தார். பின் அவர் தனக்கென அணியை தேடிச் சென்றார். மெஸராயொன்ட்ஸி என்ற அமைப்பு ஒரு கட்சியாக அல்லது ஒரு அமைப்பாக இருந்தது. அதனுடன் இணைந்த டிரொட்ஸ்கி தனக்கென ஒரு அணியை அமைக்கத் தொடங்கினார். இதற்கிடையில் மே 10இல் லெனின் டிரொட்ஸ்கியைக் கட்சியில் இணையக் கோரிய போது மறுத்தார். 'மெஸராயொன்ட்ஸி' அமைப்பின் சார்பில் முன்னேற்றம் என்ற ஒரு பத்திரிகையை வெளிக்கொண்டுவந்தார். இக்காலத்தில் டிரொட்ஸ்கி தனக்கான அணியைத்திரட்ட சோவியத்தில் தீவிரமாக முயன்றார். அனைத்து விதத்திலும் போல்சுவிக் அல்லாத வழிகளில் எழுச்சியை திசைதிருப்ப முயன்றார். இது சாத்தியம் அற்றுப்போகவே இதன் தொடர்ச்சியில் ஜுலைமாதம் ஆரம்பத்தில் கட்சியில் இணைய இருந்த டிரொடஸ்கி ஜுலையில் ஏற்பட்ட எழுற்சியுடன்

முறையல்ல பலதரம் கட்சி முடிவை மீறி தன்னிச்சையாக செயல்பட்டு ஒப்பந்தம் செய்ய முடியாது செய்ததுடன், சோவியத் ஆட்சியை அழிக்கவும் முனைந்தார். இறுதியில் டிரொட்ஸ்கி இன்றி அவ் ஒப்பந்தம் கையேழுத்தானது என்பது அறிந்ததே. லெனின் டிரொட்ஸ்கியின் மார்க்சிய விரோதம் பற்றி வேறு ஒரு சந்தர்ப்பத்தில் 'ஒலிப்பது புரட்சி முழக்கங்கள், கைகோர்த்துச் செல்வது வலது சாரிகளுடன், எதிர்ப்பது இடது சாரியை' என்று குறிப்பிட்ட லெனின் டிரொட்ஸ்கியை 'சூடாஸ்' என அழைத்தார். சூடாஸ் என்பது யேசுநாதரின் சீடராக இருந்து யேசுநாதரைக் காட்டிக் கொடுத்த ஒரு துரோகி.

சர்வதேசரீதியாக அன்று சோவியத்தில் என்ன நடந்தது என ஏகாதிபத்திய மதிப்பீடுகளை கொண்டு ஆராய்ந்து பார்ப்போம். பிரிட்டினின் இரகசிய இலாகாவைச் சேர்ந்த புருஸ் லோக்கார்ட் தனது குறிப்பில் 'லெனினுக்கும் டிரொட்ஸ்கிக்கும் இடையில் கருத்து வேறுபாடு' என இரகசிய பிரிவுக்கு செய்தி அனுப்பினான். அமெரிக்க நிருபர் ஜசக் இந்நிலை தொடர்பாக கொடுத்த அறிக்கையில் 'லெனினுடைய ஆட்சி கவிழ்ந்து விடும் டிரொட்ஸ்கியும் அவனுடைய இடது சாரிக்கூட்டத்தினரும் ஆதிக்கத்துக்கு வந்து விடுவர் என்றும் கம்யூனிஸ்டு வாலிபர்களும், பல அதிகாரிகளும், செம்படை வீரர்களும் டிரொட்ஸ்கிக்குப் பக்கபலமாகி விடுகிறார்கள்' என அறிவித்தான். இக்காலத்தில் டிரொட்ஸ்கி நாடு முழுவதும் சுற்றித் திரிந்து பல கூட்டங்களில் தீப்பொறி எனப் பேசினார். 'பழைய போல்சுவிக்குகள் பிற்போக்குகளாகி விட்டனர் வாலிபர்களே! என்பக்கம் வாருங்கள்' எனக் கூக்குரல் இட்டு அறை கூவல் விடுத்தார்.

1924 ஜனவரி 21 இல் லெனின் மரணமடைந்ததைத் தொடர்ந்து 1924மே மாதம் நடந்த கட்சிக் காங்கிரசில் லெனினுக்குப் பிறகு அதிகாரத்தை கைப்பற்ற ஸ்ராலினுக்க எதிராக தேர்தலில் போட்டியிட்டான். இருந்த போதும் 748 உறுப்பினர் ஒரு முகமாக ஸ்ராலினைத் தேர்ந்தெடுத்தனர். இதைத் தொடர்ந்து டிரொடஸ்கி மேலும் சதிகளை இரகசியமாக கையாள முயன்றான். இதற்கு வெளிநாட்டு சதிக்குழுக்களுடன் சேர்ந்தான். சர்ச்சில் என்ற பிரிட்டிஸ் உளவுப் பிரிவுடன் தொடர்பு கொண்டான். இவன் தனது நூலில் '1924 யூலை மதத்தில் காமனேவும், டிரொட்ஸ்கியும் அவனைத் (சாவிங்கோவ்) திரும்பி வரும்படி அழைத்தார்கள்' இதைத் தொடர்ந்து சாவிங்கோவ் சோவியத்துக்குச் சென்றான். ஆனால் சோவியத் அரசு அவனைக் கைது செய்தது. இது தொடர்பாக இரு உளவுப் பகுதியினருக்கம் இடையில் நடந்த கடிதத் தொடர்பை ஆராய்ந்து பார்ப்போம்.

'பிரியமுள்ள ரெயிலி,

உங்கள் கடிதம் கிடைத்தது. தொடக்கத்தில் நான் எதிர்பார்த்ததே நிகழ்ந்து விட்டது. சாவிங்கோ மீது மிகுந்த கோபம் கொள்ள மாட்டீர்கள் என நினைக்கிறேன். அவன்

டிரொட்ஸ்கியின் தற்படைப்பு நகல் ஆராச்சியுரைகள் மற்றும் கட்சி சார்பில் அவர் ஆதரிக்கும் தொழில் சங்கக் கொள்கை முழுவதையும் பற்றி முன் என்றும் கண்டிராத அளவுக்கு நீண்ட நெடிய, விரிவான காரசாரமான விவாதத்தின் மத்திய கமிட்டியின் ஒரு உறுப்பினர், பத்தொன்பது பேரில் ஒருவர், மத்திய கமிட்டிக்கு வெளியே ஒரு ...அவர் அதன் 'கூட்டு' 'முயற்சியை' 'கொள்கை' என்று முன்வைத்து 'இரு போக்குகளுக்கு இடையே தேர்வு செய்து கொள்ளும்படி' கட்சியின் காங்கிரசை அழைக்கின்றார்.1920 டிசம்பர் 25 இல் இரண்டு போக்குகள், இரண்டு போக்குகள் மட்டுமே இருப்பதாக தோழர் டிரொட்ஸ்கி அறிவித்துள்ளார். என்னும் உண்மை ஒருபுறமிருக்க நவம்பர் 9ல் புகாரின் ஒரு இடைப்பட்ட அடிதாங்கி வெளியே வந்த பிறகு கூட இது நிகழ்ந்திருப்பது, படுமோசமான, மிகவும் பாதகமான வகைப்பட்ட கோஷ்டிவாதத்தின் உடந்தையாளர்கள் என்ற முறையில் புகாரினின் கோஷ்டியின் மொய்யான வேடத்தை பச்சையாக அம்பலப்படுத்துவதாகும்..........» என நீண்டு செல்லும் இந்தக் கோஷ்டிவாத பிளவு நடவடிக்கை மேற்கோளை நாம் எடுத்துக்காட்ட முடியும். லெனினின் இந்த மதிப்பீடு மிகச்சரியானது. டிரொட்ஸ்கி எப்போதும் லெனினுக்கு எதிராக இருந்தது மட்டுமின்றி மொத்த கமிட்டிக்கு எதிராக தனி ஒருவராக இருந்தபடி கட்சியை எதிர்த்து ஒரு கோஷ்டிப்பிளவையும், வெளியில் இரகசியமாகவும், பகிரங்கமாகவும் கோஷ்டிகளை அமைத்து இயங்கியவர். இவர் லெனினின் சரியான வழிகளை மாற்றி அமைக்க இடைவிடாது போராடியது மட்டுமின்றி அதை பரிணாம வளர்ச்சியன் வன்முறை மூலம். கலைத்து விட திட்டமிட்டனர். இந்த திட்டமிடல் வளர்ச்சி என்பது எல்லா கம்யூனிச எதிரிகளை ஒன்றிணைத்து வளர்ச்சி பெற்று, பல்வேறு வழிகளில் பலரை கொன்றுவிட இரகசியமாக இயங்கினார். ஸ்டாலினையும் அவர் சார்ந்த கட்சியிலும் அன்றும், இன்றும் நடத்தும் சேறடிப்புகள் இந்த டிரொட்கிய மற்றும் வலது, இடது விலகல் பேர்வழிகளின் கூட்டு கம்யூனிச விரோத சக்திகளில் தான் எழுந்தன என்பதை டிரொட்கிய விமர்சனங்களில் இருந்து நாம் புரிந்து கொள்ள முடியும். இதை மேலும் ஆராயின் டிரொட்கியின் மார்க்சிய விரோத மதிநுட்பப் பிரச்சனைகள் என்ன எனப்பார்ப்போம்.

ஜெர்மன் – சோவியத் ஒப்பந்தத்தை எதிர்த்து திரோஸ்கி செய்யப்பட்ட அதே நேரம் பிரஞ்சுத் தரகர் மார்வுல் போக் நேசநாட்டு இரகசிய கூட்டம் ஒன்றில் பேசியதைப் பார்ப்போம். 'ஜெர்மன் போரை விரைவில் முடிக்க வேண்டும். நேச நாடுகளின் படைகளை ஒன்றாகத் திரட்டி சோவியத் ரஷ்சியாவைத் தாக்க வேண்டும்' என அறைகூவல் விடுத்தன. இந்த இடத்தில் முந்திக் கொண்ட லெனின் ஜெர்மனுடன் சமாதானம் செய்து நேசநாட்டுப் படைகளின் பலத்தை சிதறடிக்க வைத்ததன் மூலம் சிறந்த இராஜதந்திரத்தைக் கையாண்டார். இதை எதிர்த்து டிரொடஸ்கி ஒரு

குத்தலைச் சேர்த்துக் கொண்டார். தொழிற் சங்கத்துக்குள்ளே எதிர்ப்பு மனப்பாங்குடைய தோழர்களின் கோஷ்டி ஒன்று இருக்கிறது என்ற மெய்விவரத்தை லெனின் கணக்கில் எடுத்துக்கொன்டார். .......... கட்சிக் கோஷ்டிகளுக்குள்ளே சூழ்ச்சி நடவடிக்கை இருக்கிறது (பக்கம் 70) இதரவை இந்த விஷயம் மீது இத்தகைய வண்ணப் பூச்ச நடத்துவது டிரொட்ஸ்கிக்கு நிட்சயமாக மிகவும் புகழ்ச்சியாக இருக்கும். எனக்கோ இகழ்ச்சியைவிடவும் மிகவும் மோசமாக இருக்கம். »

«............ மத்திய கமிட்டியில் உள்ள கருத்து வேறுபாடுகள் காரணமாக அது கட்சிக்கு வேண்டுகொள் செய்ய வேண்டி இருந்தது. தொடர்ந்த நடந்த விவாதங்கள் இந்தக் கருத்து வேறுபாடுகளின் சாரத்தையும் வீச்சையும் தெளிவாக வெளிப்படுத்தின. அது வதந்திகளையும் அவதூறுகளையும் அழித்துவிட்டது. கட்சி கோஷ்டி வாதம் என்ற புதிய நோயை (அக்டோபர் புரட்சிக்குப் பிறகு இதைப்பற்றி முற்றும் அடியோடு மறந்து விட்டதால் இது புதியுது) எதிர்த்த போராட்டத்தில் தனது படிப்பினைகளைக் கற்றுக் கொள்கிறது. புடமிடப்பட்டு உறுதி பெறுகிறது. உண்மையில் இது பழைய

நோயே. அடுத்த சில ஆண்டுகளில் நிச்சயமாக இது மீண்டும் தோன்றலாம்......... கட்சிக்குள்ளான சித்தாந்தப் போராட்டம் என்பது பரஸ்பரம் விலக்கி வைப்பதல்ல, மாறாக பரஸ்பரம் செல்வாக்குச் செலுத்தலாகும். இநது சரியான அணுகு முறையைக் கட்சி இயல்பாகவே தோழர் டிரொடஸ்கி விடயத்தில் பயன்படுத்தும் என்பது திண்ணம். விவாதத்தின் போது தோழர் ஷ்சியாப்னிக்காவும் 'தொழிலாளர் எதிர்க்கட்சி' எனப்படும் அவரது குழுவினருமே மிகவும் முனைப்புடைய சிண்டிக்கல் வாதப் போக்கினை வெளிக்காட்டினார்கள். இது கட்சியில் இருந்தும் கம்யூனிசத்தில் இருந்தும் கண்கூடான திரிபாக இருப்பதால் ............. சிண்டிக்கல் வாதம் தொடரான 'திர்ப்புக் கட்டளை நியமனங்கள்' என்பதை உண்மையில் உருவாக்கிய தோழர் புகாரின் இன்றைய பிரவ்தா இதழில் தன்னைத் தானே நியாயப்படுத்திக் கொள்ள முனைகின்றார். ........... கம்யூனிசத்திலிருந்தான தமது திரிபில், தத்துவார்த்த முறையில் தவறானதும் அரசியல் ரீதியில் மோசடியானது மான இந்தத் திரிபில் தோழர் புகாரின் பிடிவாதமாக இருக்கும் வரையில், அவரது பிடிவாதத்தின் பலன் மிகவும் வருத்தமானதாக இருக்கும். .............. ரஷ்சிய சுரங்கத் தொழிலாளர் விஷேச மதிப்புக்குரியவராக விளங்கம் தோழர் கிசெல்யோலினது ஆதரவைப்பெற்றும் கூட ஷ்லியாப்பினிக்கலின் கொள்கைத் திட்டம் தோற்கடிக்கப்பட்டது. நமது கொள்கைத் திட்டம் 137 வாக்குகள் பெற்று வெற்றியடைந்தது. ஷ்லிப்னிக்காலின் கொள்கைத் திட்டத்துக்கு 62 வாக்குகளும் டிரொட்ஸ்கியினுடையதற்க 8 வாக்குகளும் கிடைத்தன. ............

.......... இந்த ஒரு மாற்றம் கட்சி விவததத்திற்கு இசைந்து கொடுத்த தோழர்

டிரொட்கியின் தவறான கொள்கையை மிகப் பெரிய பெரும்பான்மையால் நிராகரிக்கப்பட்டு விட்டது. என்பதை பெத்ரோகிராத், மாஸ்கோ மற்றும் ஒரு சில மாகாண நகரங்கள் காட்டிவிட்டன. மேல் மட்டத்திலும் மாகாணங்களிலும் கமிட்டிகளிலும் அலுவலகங்களிலும் நிச்சயமாக ஊசலாட்டம் இருந்திருக்கும். அதேபோல் உறுப்பினர் தொழிலாளர் அணிகளில் பெருந்திரளான கட்சி ஊழியர்கள் மிகப் பெரும்பான்மையால் தான் இந்தத் தவறான கொள்கையை எதிர்க்க உறுதியாக முன்வந்தன.
ஜனவரி 23ம் திகதி மாஸ்கோ ஸமஸ்லேரேக்கியே வட்டார விவாதத்தின் போது தனது கொள்கைத் திட்டத்தை விலக்கிக் கொண்டு ஒரு புதிய கொள்கைத்திட்டத்தின் மீது புகாரின் குழுவுடன் சேர்ந்துகொள்ளப் போவதாக தோழர் டிரொட்ஸ்கி அறிவிப்பதாக தோழர் காமெனெவ் என்னிடம் தெரிவித்தார். துரதிஸ்டவசமாக ஜனவரி 23 அல்லது 24 திகதிகளில் சுரங்கத் தொழிலாளர் காங்கிரசின் கம்யூனிஸ் குழுவில் தோழர் டிரொட்ஸ்கி எனக்கு எதிராக உரை நிகழ்த்திய போது அவரிடமிருந்த இதைப்பற்றி எதையும் நான் கேள்விப்படவில்லை. இதற்குக் காரணம் தோழர் டிரொட்ஸ்கியின் கொள்கைத் திட்டத்திலும் எண்ணங்களிலும் ஏற்பட்ட இன்னேரு மாற்றமா அல்லது வேறு காரணமா என்பதை நான் அறியேன்.»

1921 ஜனவரி 25

லெனின் – இயங்கியல் பிரச்சனை பற்றி

என்ற லெனினின் நீண்ட மேற்கோள் மூலம் டிரொட்ஸ்கிக்கும் கட்சிக்கும் இடையில் இருந்த முரண்பாட்டை இனங்காண முடியும். ஆனால் டிரொட்கிய வாதிகள் ஏதொ ஸ்ராலின் ஆட்சிக்கு வந்த பின்பே இவை ஏற்பட்டதாக காட்ட முனைவதுடன், டிரொட்கி லெனினின் கருத்துக்கள் ஒன்றாக ஒரே அடிப்படையில் மாறி இருந்ததாக சினிமா காட்ட முனைகின்றனர். டிரொட்ஸ்கி இருமுறை லெனின் காலத்தில் தனது வெவ்வேறு மந்திரிப் பதவியை விட்டு விலகியதுடன் லெனினுடனும் கட்சியுடனும் பகிரங்கமாகவும் இரகசியமாகவும். மோதினார். அத்துடன் லெனின் டிரொட்ஸ்கியின் நிலை அக்டோபர் புரட்சியின் பின் மீள எழுந்துவரும் பழைய நோய்யின் தொடர்ச்சி என தெளிவாக அறிவித்தார். லெனின் – டிரொட்கி மோதல் பற்றிய வதந்திகள், அவதூறுகள் இதை உறுதி செய்கிறது எனக் குறிப்பிட்ட லெனின், இது ஒரு கோஷ்டிவாதமாக மாறியுள்ளதையும் கூறி கட்சி இவைமீது கற்றுக் கொள்கிறது எனக் குறிப்பிட்டார். அத்துடன் இது அடுத்து அடுத்து வரும் என எச்சரித்தார். இதை டிரொட்ஸ்கி வாக்கு மூலம் தந்தான். அதைப் பார்ப்போம். 1938இல் டிரொட்ஸ்கி எழுதிய லியோன் செடோல் என்ற நூலில் டிரொட்ஸ்கி '1923இல் லியோன் (டிரொட்ஸ்கியின் மகன்)எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்டன பதினேழுவயதிலேயே அவன்

புரட்சிக்காரணானான் சதிவேலை, இரகசியக் கூட்டங்கள், பிரசுரங்கள் வழங்குதல் ஆகிய கலைகளைக் கற்றுக் கொண்டான். காம்சமால் அதாவது கம்யூனிஸ்ட் வாலிபர்கள் சங்கத்திலும், சோவியத் எதிர்ப்பாளர்களைத் தயாரித்தான்' என்ற இந்த டிரொட்ஸ்கிய வாக்க மூலம் தெளிவாக சதிகளையும், இரகசிய வேலைகளையும், இரகசிய அச்சகங்களையும் நிறுவி லெனின் மந்திரி சபையில் டிரொட்ஸ்கி இருந்த காலத்திலேயே திட்டமிட்ட செயல்பட்டான் என்பதைத் தெளிவாக்குகின்றது. இதைக் கவனத்தில் கொண்டே லெனின் 1921 மார்ச்சில் கட்சிக் கட்டுப்பாட்டைக் கோரினார்.

«கட்சிக்குள் கட்சி ஏற்படுவதானது, புரட்சிக் கட்சிக்கு கேடு விளைவிக்கும். இன்று முதல் கட்சித் தலைவர்கள், பெரும்பாண்மையானோரால் நிறைவேற்றப்படும் தீர்மானங்களுக்கும், பெரும்பாண்மையினர் ஆட்சிக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். தவறி நடப்பவர்கள் கட்சியில் இருந்து நீக்கப்படுவர்.» என 10வது காங்கிரசில் தீர்மானித்த அதே நேரம் லெனின் 'டிரொட்ஸ்கி விளைவிக்கும் குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு சேவியத் விரோதிகள் டிரொட்ஸ்கிய வாதிகள் என்ற பெயரைக் கட்சிக்குள் நுழைத்து விடுகிறார்கள்.' என மத்திய கமிட்டி மூலம் டிரொட்ஸ்கியை எச்சரித்தார். டிரொட்ஸ்கி அக்காலத்தில் பகிரங்கமாக 'பழைய போல்சுவிக்குகள் பிற்போக்குகளாகிவிட்டனர். வாலிபர்களே! என்பக்கம் வாருங்கள்' என பல இடங்களில் பேசினான். இதன் தொடர்ச்சியில் தான் கட்சிக்கட்டுப்பாட்டை கட்சி கோரியது. டிரொட்ஸ்கி சதிவேலை செய்த அதே நேரம் ஒரு அதிகார வர்க்க சார்பாக தன்னையும், தமது அணியையும் கட்டி அமைத்தான். இதை இன்று டிரொட்ஸ்கிய வாதிகள் ஸ்ராலின் மீது வீசி எறிவது என்பது வேடிக்கையாக உள்ளது. லெனின் இதுபற்றி என்ன கூறினார் எனப் பார்ப்போம்.

«....... ஆக நிர்வாக அமைப்புக்களின் அலுவலகர்களில் சராசரி 61.6 சதவீதம் பேர், அதாவது பாதிக்கும் அதிகமாக கிட்டத்தட்ட மூன்றில் இரண்டுபங்கினர் தொழிலாளர்கள் என்பதைக் காணலாம். ! இந்த விஷயமாக டிரொட்ஸ்கி தனது ஆராச்சி உரைகளில் என்ன எழுதினாரோ அது அதிகார வர்க்கத் தோரனையின் செயலே என்பதை இது ஏற்கனவே நிருபிக்கிறது (அடிக்கோடு லெனின்) 'மூன்றில் ஒரு பங்கில் இருந்த பாதிவரை' என்னும் போதும் தர்க்கம் செய்வதும், கொள்கை அறிக்கைகள் எழுதுவதும், மிகவும் பயனற்ற வகையைச் சேர்ந்த 'பொதுக் கட்சியின் பேச்சு' இது உற்பத்தி வேலையில் இருந்து காலம், கவனம் மற்றும் மூலவளங்களைத் திசைதிருப்புகிறது. இது ஆழ்ந்த பொருளிலில்லாத, வெட்டித்தனமான அரசியலாகும்.» என்று லெனின் இயங்கியல் பிரச்சனை பற்றிய நூலில் மிகச் சரியான நிலையை இன்று மறுக்கும் டிரொட்ஸ்கிய வாதிகள் டிரொட்ஸ்கியின் வெட்டித்தனமான அரசியலையும், அதை அதிகாரத் தோரனையில் நிறுவிவிட முனையும் போக்கையும்

எதிர்த்து லெனின் தொடர்ந்து போராடினார். ஆனால் இன்று லெனினையே திரிக்கும் டிரொட்ஸ்கிகள் இவைகளை ஸ்ராலின் மீது மூட்டை கட்டி தூக்கி விட முனையும் கபடம் நிறைந்த வம்புப் பேச்சுக்களைச் செய்கின்றனர். டிரொட்கியினால் கட்டி அமைக்கப்பட்ட கோஷ்டி வாதங்களை இன்று ஸ்ராலின் மீது தள்ளிவிட லெனினைக் கூட தம்முடன் பேச்சளவில் இனைத்துக் கொள்கின்றனர். ஆனால் லெனின் இயங்கியல் பிரச்சனை பற்றிய நூலில் டிரொட்ஸ்கியின் கோஷ்டிவாதம் கட்சியை இரண்டாக்க முயல்வதை மிகத் தெளிவாக இனங்காட்டுவதையும் பார்ப்போம்.

«ஒரு காங்கிரசுக்கு முன் நடைபெறுவதைப் போல் ரஷ்சியாவின் கம்யூனிசக் கட்சியின் 10வது காங்கிரசுக்கு நடைபெறவிருக்கம் தேர்தலுக்கு முன்பாகவும், தேர்தலுடன் தொடர்புடையதுமான கட்சி விவாதமும், கோஷ்டிவாதப் போராட்டமும் சூடுபிடித்து வருகின்றன. முதலாவது கோஷ்டிவாதப் பிரகடனம் தோழர் டிரொட்ஸ்கியால் 'பல பொறுப்பான ஊழியர்கள் சார்பில்' அவரது 'கொள்கைப் பிரசுரத்தில்' செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து ருக.க இன் பெத்ரோகிராத் கிளை ஒரு கடுமையான பிரகடனத்தை வெளியிட்டது. (1921 ஜனவரி 6ம் திகதி பெத்ரோசித்ஸ்கயா பிராவ்தா மற்றும் கட்சியின் மத்திய ஏடான மாஸ்கோ பிராவ்தா 1921 ஜனவரி 13ம் திகதி வெளியிட்ட கட்சி வேண்டுகோள்) ...... இந்தப் பிரச்சனைகளை விவாதிப்பதற்கான கட்சிக் கூட்டங்கள் கிட்டத்தட்ட எல்லா இடங்களிலும் நடந்து வருகின்றன. ......... தோழர் டிரொட்ஸ்கியின் தொழிற்சங்கங்களில் பங்கும் பணிகளிலும் எனும் பிரசுரம் ஒரு கோஷ்டிவாதப் பிரகடனமா? அதன் உள்ளடக்கம் ஒரு வகையிலும் இந்த வகையான பிரகடனத்தால் கட்சிக்கு எப்போதும் அபாயம் உண்டா? இந்தக் கேள்விகளைக் கிளப்பாமல் அமுக்கிவிடும் முயற்சிகள் விசேஷமாக மஸ்கோ கமிட்டி உறுப்பினர்களில் விருப்பு விளையாட்டாக இருக்கின்றன. ............ தோழர் புகாரின் இடைப்பட்ட குழுவின் சார்பில் 1920 டிசம்பர் 30ந்திகதி பின்வரும் அறிக்கையை வெளியிடும் கட்டாயத்திற்கு ஆளானார்.

'......... ஒரு ரயில் வண்டித்தொடர் வீழ்ச்சி நோக்கிச் சரியும் போது ஒரு இடைப்பட்ட அடிதாங்கி இருப்பது மோசமானதல்ல. ........... எனவே வீழ்ச்சி அடைகின்ற அபாயம் இருக்கிறது. ............ டிரொட்ஸ்கியின் பிரசுரம் 'இது கூட்டும் பணியின் பலன்' ...... 'இதைத் தொகுப்பதில் பங்கெடுத்தார்கள்' என்றும் தெரிவிக்கின்ற ஒரு அறிவிப்புடன் தொடங்குகிறது. வரப்போகும் கட்சியின் காங்கிரஸ் தொழிற்சங்க இயக்கத்தின் அகத்தே இருக்கும் இருபோக்குகளின் இடையே ஒன்றைத் தேர்வு செய்ய (அழுத்தம் டிரொட்கியுடையது) வேண்டி நேரும் .......... இது மத்திய கமிட்டி உறுப்பினர் ஒருவர் மூலம் உருவாக்கப்பட்ட ஒரு கோஷ்டிப்பிரிவல்ல என்றால் 'இது ஒரு வீழ்ச்சியை நோக்கி சரிவது' ஆகாது என்றால் ....... சற்றே சிந்தியுங்கள். தோழர்

சமாதானத்தினை ஏற்காதவன், இதில் கையெப்பமிட விரும்பாதவன் வெறும் வாய்செல்லில் வீரனே தவிர போர் தந்திரியல்ல. இதில் தான் சங்கடம். மத்திய கமிட்டி உறுப்பினர்கள் எனக்கு, 'பலவீனத்தின் பிரகடனம்' (துரோகம்) என்றெல்லாம் எழுதும் போது, அவர்கள் அதிகத் தீங்கு விளைவிக்கின்ற வெறுமையான........»

லெனின் (தேர்வு நூல் –7)

என்ற வார்த்தை மூலம் டிரொட்ஸ்கிக்கும் அதன் ஆதரவாளர்களுக்கம் எதிராக லெனின் 1917ல் போராட வேண்டிய கட்டாயத்துக்குள்ளானார். மேலும் டிரொட்ஸ்கி 1920களில் லெனினுடன் மோதிய இன்னேன்றைப் பார்ப்போம்.

«......... தோழன் டிரொட்ஸ்கி தனது ஆராட்சி உரைகளில் வேலைத்திட்டத்தினை வைத்து முன்வைக்கப்பட்டள்ள இலக்கை நோக்கி நடந்த காலத்தில் எவ்விதமான முன்னேற்றமும் காணவில்லை, மாறாக உண்மையில் அதிலிருந்து பின்வாங்கியே இருக்கின்றோம். என்று கூறுகின்றார் இந்த அறிவிப்புக்கு ஆதாரம் இல்லை இது தவறு எனக் கருதுகிறேன். தொழிற் சங்கங்கள் 'தாமே' இதை ஒப்புக்கொள்கின்றன என்று டிரொட்கி விவாதத்தின் போது கூறியது போன்று செல்லாது இதற்கு சான்றாக ......... நாம் ஏன் பின்வாங்க நேர்ந்தது? டிரொட்ஸ்கி கருதுவது போன்று 'பல தொழிற்சங்க வாதிகள்' புதிய கடமைமுறைகளைத் தடைப்படுத்துவது காரணமா அல்லது அதிகார வர்க்கத்தின் பயனற்ற பாதகமான மிகைச் செயல்களைத் தடுத்து நிறுத்தி திருத்துவதற்கான அவசியமான சக்திகளைத் திரட்டி தேவையான வழிமுறைகளை வகுப்பதில் தான் இன்னும் வெற்றியடையாததற்கு காரணமா?»

என்று டிரொட்ஸ்கியை நோக்கி லெனின் கேள்வி எழுப்பும் போது அங்கு இருந்த அதிகார வர்க்கத்தை பாதுகாத்துக் கொள்வதில் டிரொட்ஸ்கி அவதானமாக இருந்தார். தனது தொழிற் சங்கவாதக் கொள்கைகளை முன் தள்ளுவதன் மூலம் கட்சியை தொழிலாளர் பின் வால்பிடிக்க வைப்பதன் மூலம் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை சிதைப்பதற்கு தீவிரமாக முனைப்புப் பெற்றார். மேலும் லெனின் விளக்கையில்.

«ஒன்பதாவது கட்சிக் காங்கிரஸ் வகுத்து முன்வைத்த கொள்கை வழியை நாம் கைவிட்டு விட்டோம் என்றும் (டிசம்பர் 30 திகதி விவாதம் பற்றிய அறிக்கை பக்கம் 46) டிசம்பர் 30 திகதி தோழர் புகாரினின் கடிந்துரையினை (நேற்று ஜனவரி 24ந் திகதி டிரொடஸ்கியால் இரண்டாம் அரசாங்கத் தொழிலாளர் காங்கிரஸ் கம்யூனிஸ் பிரிவில் நடந்த விவாதத்தின் போது அது மீண்டும் எழுப்பப்பட்டது.) இது நினைவுறுத்துகிறது. அந்தக் காங்கிரசில் நான் உழைப்பு இராணுவ மயமாக்கப்படுவதை தாங்கி ஆதரித்ததாகவும், ஜனநாயகம் பற்றிக் குறிப்பிட்ட போது ஏளனம் செய்ததாகவும் அவை அனைத்தையும் நான் இப்பொது 'மறுத்து நிராகரித்ததாகவும்' அவர் குற்றம் சாட்டினார். டிசம்பர் 30 திகதி விவாதத்திற்கு பதிலளிக்கையில் டிரொடஸ்கி இந்தக்

இணைப்பைக் கைவிட்டார். பின் ஜூலை 23ம் திகதி கைதுசெய்யப்பட்டு சிறையில் இருந்த போது போல்சுவிக் மத்திய குழு அவரை தனது மத்திய குழுவிற்கு அவர் இன்றித் தெரிவு செய்தது.

டிரொட்ஸ்கி சோவியத்தின் தலைவர் ஆனதுடன் அத் தலைமையின் கீழ் எழுச்சி நடைபெறும் எனவும் அறிவித்தார். இதன் தொடர்ச்சியில் லெனின் ஆயுத எழுச்சியை கட்சியின் பெயரிலும், அதுவும் தனது சொந்தப் பெயரிலும் நடத்தும் படி மத்திய குழுவில் கோரினார். ஆனால் டிரொட்ஸ்கி சோவியத்தின் பெயரால் நடத்த வேண்டும் என மீண்டும் மீண்டும் முன்மொழிந்தார்.»

இந்தவகையில் நீண்ட காலமாக லெனினும், அவர் தோழர்களும் கட்டிய ஒரு கட்சியையும் அதன் புரட்சியையும் டிரொட்ஸ்கி ஒரே நொடியில் முறியடித்துவிட சோவியத் பெயரால் புரட்சியை தலைமை தாங்கக் கோரினார். சோவியத் அன்று பல்வேறு அணிகளின் ஒரு கதம்பக் கூட்டமாக இருந்ததுடன், அதன் பெயரால் நடைபெறும் புரட்சி அதிகாரம் போல்சுவிக்குகள் அல்லாத மற்றைய பிரிவுகளும் கைப்பற்றுவதன் மூலம், போல்சுவிக்குகளைப் பயன்படுத்தி டிரொட்கி தனது ஆட்சியை நிறுவ முனைந்தான்.

1917இல் கைப்பெற்றப்பட்ட ஆட்சியும், அதன் தொடர்ச்சியிலும் டிரொட்ஸ்கிக்கும் லெனின் சார்ந்த கட்சிக்கும் இடையில் தொடர்ச்சியான முரன்பாடுகள் நீடித்திருந்தன. 1918துவக்கத்தில் புரட்சி நடைபெற்று சிறிது காலத்தில் ஜெர்மனிய சோவியத் சமாதான உடன்பாடு தொடர்பான விடையத்தில் கையாளப்பட்ட விடையங்களைப் பார்ப்போம். லெனின் டிரொட்ஸ்கி – மூன்றாவது ஒரு அணிக்கும் இடையில் எற்படும் முரன்பாட்டின் தொடர்ச்சியில் ஒப்பந்தம் கையெழுத்து இடப்படவேண்டும் என ஒரு முடிவுக்கு கட்சி வருகின்றது. இருந்த போதும் டிரொட்ஸ்கி முதற் சுற்று பேச்சுவார்த்தையின் போது கட்சியின் முடிவை மீறி தனது சொந்தக் கொள்கையை அமுலுக்கு இட்டுச் செல்கின்றார். இதனால் சோவியத்தின் மீது ஜெர்மனிய தாககுதலில் பல பிரதேசத்தை இழந்து விடுவதில் சென்றது. தொடர்ச்சியாக அடுத்த கட்ட பேச்சு வார்த்தையில் டிரொட்ஸ்கி கலந்த கொள்ளாமலே பேச்சு வார்த்தை நடைபெற்றது. ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது. இவை தொடர்பான விவாதத்தின் போது, தனது திட்டத்தை ஏற்க மறுத்த கட்சியை எதிர்த்து டிரொட்கி தனது அயல்துறை அமைச்சர் பதவியை இராஜினாமா செய்து விடுகின்றார். இந்த இடத்தில் டிரொட்கி இந்த ஒப்பந்தம் துரோகத் தனமானது என வருணித்து லெனினுடன் மோதினார். இதை லெனின் விளக்குகையில்

«தோழர் டிரொட்ஸ்கி இது உண்மையான துரோகம் என்கின்றார். இது முற்றிலும் தவறான கருத்து என்று நான் கூறுகின்றேன். ........ இப்பொது இந்தப் பிசாசுச்

தப்ப முடியாத நிலையில் சிக்கிக் கொண்டான். அத்தகைய நிலைமையை வெற்றிகரமாக சமாளித்தவர்களுக்குத் தான், அவனைக் கண்டிக்க உரிமை உண்டு. சலிங்கோவின் கதை முழுவதும் தெரிவதற்கு முன் அவனைப்பற்றி நான் கொண்டுள்ள கருத்தை மாற்றிக் கொள்ள விரும்பவில்லை.
–சார்ச்சில்–'

என்ற இந்த டிரொட்ஸ்கிய கூட்டுக்கு கிடைத்த ஒரு ஆதாரமாகும். டிரொட்ஸ்கி எல்லாவித இடது, வலது அமைப்புக்களையும் பயன்படுத்தி ஸ்ராலினின் தலைமையிலான பாட்டாளி வர்க்க ஆட்சியை கவிழ்த்துவிட கங்கனம் கட்டிச் செயற்பட்டன. இதே நேரம் உள்நாட்டில் நிலமைகள் மோசமாகிச் சென்றது. டிரொட்ஸ்கி கட்சியை எதிர்த்து தீவிரமாகச் செயற்பட்டான். என் வாழ்க்கை வரலாறு என்ற நூலில் டிரொட்ஸ்கி எழுதுகின்றான் 'கட்சிச் சண்டை வலுத்து 1926ம் ஆண்டு வசந்த காலத்தில் எதிர்க் கட்சி, வெளிப்படையாக கட்சிக்கூட்டத்தில் கலவரம் செய்து எதிர்ப்பு பின்வாங்க நேரிட்டது.' என டிரொட்ஸ்கி தனது சொந்த வாக்கு மூலத்தில் தருகிறான். அதாவது எதிர்த்து நிற்க முடியாத நிலமை ஏற்பட்டதால் அதற்கான காலம் கனியும் வரை பின்வாங்கிய டிரொட்ஸ்கி 1927 இல் சோவியத் மீது ஒரு அன்னிய நாட்டு போர் தொடுக்கப்படும் என்ற நிலை நிலவிய காலத்தில் டிரொட்ஸ்கி மீளவும் தாக்குதலைத் தொடங்கினான். அதை டிரொட்ஸ்கி தனது 'என் வாழ்கை' என்ற நூலில் 'மாஸ்கோ, லெனின்கிராட் ஆகிய இரு நகரங்களில் பல இடங்களில் இரகசியக் கூட்டங்கள் நடந்தன. தொழிலாளர்களும், மாணவர்களும், மாணவிகளும் இருபது முதல் இருநூறு நபர்கள் வரை, கூட்டங்களுக்கு வந்திருந்தார்கள். ஒரே நாளில் நான்கு கூட்டங்களுக்கு நான் போனதுண்டு' என தனது சதியை பற்றி அழகாகவே வாக்கு மூலம் தருகின்றார். இந்தளவுக்கும் கட்சியில் இருந்தபடி இதைச் செய்ததுடன், எந்தளவுக்கு சோவியத் ஆட்சியில் கருத்துச் சுதந்திரம் சதிவரைக்கு கூட அனுமதியளித்திருந்தது என்பதை மிகவும் தெளிவாகின்றது. 1927 நவம்பர் 7ம் நாள் எதிர் புரட்சி நடத்த டிரொட்ஸ்கி திட்டமிட்டான். (இதையே தொழிலாளர் பாதையில் புகாரின் 1917, 1927 தமது தவறு என்கிறார்.) ஆனால் அன்று தொழிலாளர் அணிவகுப்பின் முன், முன்நிற்க முடியாது டிரொட்கி சிதறி பின்வாங்குகிறார்.

அன்று திரொஸ்கியின் பல இரகசிய அச்சகங்கள், ஆயுதங்களையும் கைப்பற்றிய சோவியத், மாஸ்கோவில் எதிர்ப்புரட்சி நடக்க விருந்த நேரம் லெனின்கிராட்டிலும் எதிர்புரட்சி நடத்தச் சென்றிருந்து சினோவ்க், ராடெக்கையும் கைது செய்தார். ரஷ்சியத் தூதனாக யப்பானுக்கு சென்றிருந்த டிரொஸ்கிய வாதியான ஜோபி இந்த சதி தோல்வியில் முடிந்ததை அறிந்து அங்கேயே தற்கொலை செய்து கொண்டான். அன்று பழைய வெள்ளை இராணுவ அதிகதாரிகள், சமூகப் புரட்சிக்காரர்கள், அன்னிய நாட்டு

ஏஜன்டுகளும், டிரொட்ஸ்கிய வாதிகளும் பல இடங்களில் கைது செய்யப்பட்டனர். இந்த எதிர் புரட்சியைத் தொடர்ந்து டிரொட்ஸ்கி கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டு, வேறு இடத்தில் இருக்க அனுமதிக்கப்பட்டார். ஆனால் அங்கு தனக்குக் கிடைத்த அனைத்து வசதிகளையும் பயன்படுத்தி சோவியத்துக்குள் தொடர்ந்தும் சதி செய்தார். அதை அவர் என்வாழ்க்கை என்ற நூலில் ஒரு சோவியத் பிரதிநிதியைச் சந்தித்ததைப் பற்றி எழுதுகையில் 'உங்கள் கூட்டாளிகள் நாடு முழுவதும் சோவியத்துக்கு எதிராக சதி வேலையை மீண்டும் தொடங்கிவிட்டனர். அல்மா அட்டாசில் உங்களைச் சில வசதிகளுடன் வைத்ததினால் அந்த வேலையை நடத்த, நல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.' என ஒரு சோவியத் பிரதிநிதி குறிப்பிட்டதை டிரொட்கி தனது சுயசரிதை நூலில் இதைக் குறிப்பிட்டுள்ளார்.

1929 பெட்டவரி 13இல் தொடர்ச்சியான சதிவேலை காரணமாக நாடுகடத்தப்பட்ட டிரொட்ஸ்கி தனது முதல் மெய்காவலன் மூலம் 1930இல் சோவியத்யூனியனுக்குள் திருட்டுத் தனமாக ஆயதங்களை அனுப்பியதால் மெய்க்காவலன் சுட்டுக் கொல்லப்பட்டான். டிரொட்ஸ்கி தான் 'மாபெரும் புரட்சிக்காரன்' என்ற பெயரை தக்கவைக்கவும், அவன் அடிக்கடி 'விதியா? அதைக் கேட்டு நான் சிரிக்கிறேன். மனிதர்களா? அவர்கள் அறிவிலிகள்' எனக் கூறிக் கொண்ட வெளிநாடுகளில் செயற்பட்டான்.

ஜெர்மன் எழுத்தாளர் எமில் லட்லிக் அவரைச் சந்தித்த போது டிரொட்ஸ்கி 'ரஷ்சியா மிகுந்த நெருக்கடிக்குள்ளாகி இருக்கிறது. ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிபெறவில்லை, வேலையில்லாத் திண்டாட்டமும் பொருளாதாரச் சீர்குலைவும் ஏற்படும். கூட்டு விவசாயம் படுதோல்வி, ஸ்ராலின் நாட்டைப் பாழ்படுத்துகிறார். எதிர்ப்பு பெருகி வருகிறது' எனக் கூறினார். 'ரஷ்சியாவில் உங்களைப் பின்பற்றுபவர்கள் எத்தனைபேர்' என அவர் கேட்ட போது 'அதை மதிப்பிட முடியாது பலர் தலைமறைவாக வேலை செய்கின்றனர்' என பதிலளித்தார். 'நீங்கள் எப்போது வெளிப்படையாக வேலை செய்ய முடியும்' என்று கேட்ட போது 'வெளியில் இருந்து வாய்புக் கிடைக்கும் போது. போர் ஏற்பட வேண்டும், அல்லது அரசாங்கத்தின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஐரோப்பிய நாடுகள் புதிய தாக்குதலைத் தொடுக்க வேண்டும்.' என்று பேட்டி அளித்த டிரொட்ஸ்கி எப்படி எந்த வகையில் செயல்பட்டார் என்பதைக் காண முடியும். அமெரிக்க நிருபர் ஜன்குந்தர் டிரொட்ஸ்கியையும் அவருடன் இருந்தவர்களையும் சந்தித்த பின் அவர் எழுதுகிறார். 'அவர் நாடுகடத்தப்பட்டவரைப் போல் நடந்து கொள்ளவில்லை மணிமுடி தரித்த மன்னன் அல்லது ஜார் வாதி என்றே அவரைச் சொல்லலாம்' எனக் குறிப்பிட்டார். .......... தொடர்ந்து அவர் நான்காவது அகிலத்தின் குறிக்கோளையும், அது செய்த வேலையையும் அவர்

கேட்ட போது டிரொட்ஸ்கி பதில் ஒன்றும் கூறவில்லை மாறாக இரகசிய ஏடுகளைக் காட்டினார். பின் ஜன்குந்தர் எழுதினார்

'டிரொட்ஸ்கி ரஷ்வியாவை இழந்து விட்டானா இல்லை சிறிது காலத்திற்காகவாவது அவன் இழந்து விட்டான் என்று சொல்லலாம். பத்து அல்லது இருபது ஆண்டுகளிலாவது அவன் அதை திரும்ப பெற முடியுமா என்று எவராலும் சொல்ல முடியாது. ஸ்ராலின் வீழ்ச்சியுறுவார் என்ற நம்பிக்கை அவனுக்கு இருக்கிறது. ......... ஒன்றே ஒன்று தான் டிரொட்ஸ்கியை ரஷ்சியாவிற்கு செல்லவைக்க முடியும். அது ஸ்ராலினின் மறைவு.' என அவ்நிருபர் குறிப்பிட்டார். அந்தளவுக்கு டிரோட்ஸ்கி இரகசிய சதி அமைப்புக்களை கம்யூனிச எதிர்ப்பு அணிகளை கட்டி வந்தான். இந்நிலையில் டிரொட்ஸ்கி சர்வதேச ரீதியாக அன்னிய நாடுகளுடன் கொண்டிருந்த கூட்டுகளையும், அதை ஒட்டிய ஆதரங்களையும் பார்ப்போம்.

டிரொட்ஸ்கியுடன் இருந்த டிரொட்ஸ்கிய வாதியான சிரஸ்டின்ஸ்கி 1930இல் சோவியத் வெளிநாட்டு மந்திரியாக இருந்தவன். இவன் 1930கள் வரை ஜேர்மனியஅரசிடம் இருந்து உள்நாட்டு சதிக்காக 20,00,000 தங்க மார்க்குகளை பெற்றிருந்தான். இந்த உதவி 1930இல் நிறுத்தப்படுமளவுக்கு நாசிய நெருக்கடிகளுக்கு உள்ளாகிய ஜேர்மனிய அரசு. இதைத் தொடர்ந்து டிரொட்ஸ்கி ஜேர்மனிய வேவு இலாகாவுடன் புதிய ஒப்பந்தம் செய்தான். முந்திய உதவிக்காக சோவியத் இராணுவ இரகசியங்கள் கையளிக்கப்பட்டன.

1931இல் டிரொட்ஸ்கியின் மகன் லியோன் செடோப் பேர்லினுக்குப் போனான். அவன் ஒரு மாணவன் என பிரயாணச்சீட்டில் எழுதப்பட்டிருந்தது. ஆனால் அவன் தலைநகரில் சதிவேலைகளில் ஈடுபட்டிருந்தான். சோவியத் வர்த்தக கமிட்டியில் இருந்த டிரொட்ஸ்கியவாதிகள் பேர்லினுக்கு வந்திருந்தனர். அவர்கள் சுமிர்நோவ், பயாட்டக்கோஸ் ஆகியோர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். சுமிர்நோவ் 1931இல் சோவியத்தில் டிரொட்ஸ்கிக்கு சாதகமாக சதிசெய்ததையும், அவன் பெர்லினில் டிரொட்ஸ்கியின் மகனைச் சந்தித்ததையும் மேல் குறிப்பிட்ட தொழிலாளர் பாதை ஒத்துக் கொண்டுள்ளதை கவனமாக நாம் குறித்துக் கொள்ள வேண்டும். செடோவ் அவர்களுடன் சந்தித்ததுடன் சதிபற்றி ஆராய்தனர். பயாட்டக் கோல் தனது நாட்குறிப்பில் இதுபற்றி குறிப்பிடுகையில்

'செடோவை நான் ஒரு விடுதியில் சந்தித்தேன். நீண்டகாலமாக நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் நன்கறிவோம். டிரொட்ஸ்கியின் பிரதிநிதியாக அவன் பேசுவதாகச் சொன்னான். ஸ்ராலின் தலைமையை எதிர்க்கும் போராட்டம் முடியவில்லை. டிரொட்கி ஒவ்வொரு நாடாக நாடு கடத்தப்படுவதால், போராட்டம் தற்காலிகமாகத் தடைப்படுகின்றது. மீண்டும் அப்போராட்டம் தொடங்கப்பட்டிருப்பதாயும், செடோவ் என்னிடம் சொன்னான். இந்தப் போரில் கலந்து கொள்ள முடியுமா என்று ஒளிவு

மறைவின்றி என்னைக் கேட்டான். நான் சம்மதித்தேன்' இதன்படி முதலில் ஜெர்மனில் இருந்த போர்சிக், டெமாக் என்ற இரு ஜெர்மன் கம்பனிகளில் கூடிய சாமான்களை கூடுதல் விலைகொடுத்து வாங்குவதன் மூலம் அதில் கிடைக்கும் பணத்தை சோவியத் எதிர்ப்புக்கு பயன்படுத்தக் கோரினேன். செடோல்.

பயாட்டக்கோவ் நாடு திரும்பியவுடன் டிரொட்கியிடம் இருந்து ஒரு செய்தி வந்திருந்தது. அதன்படி ஸ்ராலினையும் அவருடைய கூட்டாளிகளையும் ஒழிப்பதே. அத்துடன் அனைத்து எதிர்ப்பு சக்திகளையும் ஒன்றிணைப்பது. (இதை இத் தொழிலாளர் பாதை ஏற்றுள்ளது.) டிரொட்ஸ்கியின் புதிய திட்டத்திற்கு பயாட்டக்கோவ் தலைவனாக இயங்கியதும் எல்லா இரகசிய இலாக்காவுடனும், சகல எதிர்ப்பு குழுக்களை ஒன்றிணைப்பதை டிரொட்கிய வாதிகளான கார்ல், ராடேக் போன்ரோரை திடுக்கிட வைத்தது. டிரொட்ஸ்கி ராடெக்குக்கு இரகசியமாக எழுதிய கடிதத்தில் 'கடந்த காலத்திட்டத்தை நாம் இனிக் கையாள்வதில் பயனில்லை என்பது நாம் பெற்ற அனுபவம். எனவே நாம் இனி புதிய முறையைக் கையாள வேண்டும். ஒன்று சோவியத் யூனியனுக்குள் நாம் அழிய வேண்டும் அல்லது தலைமைப் பதவி ஒழிய வேண்டும்' எனக் குறிப்பிட்டான். இக்கடிதம், மற்றும் பயாட்டக்கோஸ்சின் வற்புறுத்தலால் ராடெக் இயங்க ஒத்துக் கொண்டான். இந்தவகையில் சிமிர்னோவ், மிராக் கோல்ஸ்கி, டிரீட்சர் போன்றோர் இரகசிய பயங்கரவாத அமைப்பாளராக செயல்பட ஒத்துக்கொண்டனர். 1932ம் ஆண்டு மிராக்கோல்ஸ்கி தனது அணிகள் மத்தியில் குறிப்பிட்டனர் 'கட்சியின் திட்டம் முறிந்து விடும் என்ற நம்பிக்கையில் இருந்தோம். அதில் நாம் தோல்வி அடைந்து விட்டோம். நாம் இதுவரை பின்பற்றிய போராட்டத் துறைகளால் பயன் ஏதும் கிடைக்கவில்லை. இனி ஒரே ஒரு போராட்டப் பயணம் தான் இருக்கிறது. பலாத்காரத்தினால் கட்சியின் தலைமையை அகற்றுவது. ஸ்ராலினையும் மற்றும் தலைவர்களையும் ஒழித்துக்கட்ட வேண்டும். அதுவே முதல் வேலை.' என தமது அணிகளுக்கு தெரிவித்தான். இதைத் தொடர்ந்து சோவியத் எதிர்ப்புக் குழுக்களுக்கு இடையில் ஐக்கிய முன்னணி அமைக்கப்பட்டது. (இதை இத் தொழிலாளர் பாதை ஏற்றுள்ளது.)

இவ் அமைப்பின் பெயர் 'வலதுசாரிகள், டிரொடஸ்கிய வாதிகள் ஆகியோரின் குழு' மூன்று செயல்முறைக் கமிட்டி அமைக்கப்பட்டன. சிணோரிவ், பயாட்டக்கோவ் ஆகிய இருவரும் இருகுழுக்களாகவும், புகாரின், சிரிஸ்டின்ஸ்டுவும் மூன்றாவது கமிட்டியின் தலைவர்கள் ஆனார்கள்.

1933 செப்டம்பர் மாதம் கிட்லர் ஜெர்மனியில் ஆட்சிக்கு வந்தான். அதைத் தொடர்ந்து ஒரு யுத்தம் நடைபெறும் என்பதையும், அதே நேரம் ஜெர்மனிக்கு சில சலுகை வழங்குவதன் மூலம் இந்த யுத்தத்தைப் பயன்படுத்த டிரொட்ஸ்கி முயன்றான். இதன்

தொடர்ச்சியில் சோவியத் உதவி மந்திரியாக இருந்த திரோஸ்கியின் கையாளான செக்கோல்நிக்கோவ், ராக்சியின் அலுவலகத்திற்கு திடீர் என வந்த ஜப்பானியத் தூதுவன் இவர்களிடம் 'இதைக் கேளுங்கள் நான் வெளிநாட்டு இலாகா அலுவலகத்தில் பேசி முடித்ததும், டிரொட்ஸ்கி தன் அரசாங்கத்துக்கு அனுப்பிய திட்டங்களை எனக்கு சொல்ல முடியுமா?' எனக் கேட்டான். அதற்கு செக்கோல்நிக்கோல் 'சோவியத் உதவி மந்திரியாக நான் இதை எப்படி செய்வது இது முடியாத செயல்' என்று கூறினான். தொடர்ந்து 'ஆத்திரப்படவேண்டாம் இங்குள்ள நிலமை டிரொட்ஸ்கிக்குத் தெரியாது. இனி இம்மாதிரி நேரிடாது. ஒற்றர்கள் விழித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே ஜெர்மனி அல்லது ஜப்பானுடன் ஒப்பந்தம் செய்ய முடியாது என்று நான் டிரொட்கிக்கு முன்னமே எழுதுகிறேன்.' எனக் கூறினான். இந்தளவுக்கு நிலமை ஒரு புறம் செல்ல சிலரை இரகசியமாக கொன்றுவிட திட்டம் இடப்பட்டது. அது மறைமுகமான வழிகளில் முதன்மையானவர்களான ஸ்ராலின், வாரோஷிலோவ், மாவுட்டோவ், ஜடானோவ், கிரோவ், மாக்ஸிம் கார்க்கி கொல்லப்பட வேண்டும் என டிரொடஸ்கிகள் திர்மானித்தனர். இதைத் தொடர்ந்து மாவுட்டோவைக்கொல்ல அவன் கார்ச்சாரதியான திரொஸ்கிய வாதியான வாலண்டைக் அக்னால்டுவைக் கேட்டனர். இதன்பின் சோவியத் மந்திரிசபைத் தலைவரான மாவுட்டோவைக் கொல்லும் நோக்கில் தனது காரை திடீர் என பள்ளத்துக்கு திருப்பி ஓடிய போதும் கடைசி நேரத்தில் தனது மனோத்திடத்தை இழந்து அதை அவன் கைவிட்டான். இதனால் அவர் தப்பிக் கொண்டார்.

இக்காலத்தில் டிரொட்ஸ்கி தனது மெய்காவலனாக இருந்த டிரிட்செர்க்கு கண்ணுக்கு புலப்படாத மையினால் எழுதிய கடிதம் ஒன்றில்

'பிரயமுள்ள நண்பனே!

இப்போது நாம் நிறைவேற்ற வேண்டிய அவசர - அவசிய வேலைகளான

1) ஸ்ராலின், வரோஷ்கோல்ஆகிய இருவரையும் அகற்றுவது.

2) இராணுவத்தில் ஒரு குழுவை அமைப்பது.

3) போர் மூண்டால் அதிகாரத்தைக் கைப்பற்ற அந்த நிலையைப் பயன்படுத்துவது.' என டிரொட்ஸ்கி எழுதினான்.

இதன் தொடர்ச்சியில் 1934 டிசம்பர் 1ம் திகதி லெனின்கிராட் கட்சிக் காரியதரிசியான ஸ்ராலிலின் நெருங்கியவருமான கிரோவ் கொலை செய்யப்பட்டார். மே 1934 கிரோவ் பாடுகொலைக்கு 6 மாதத்துக்கு முன் சோவியத் இரகசிய இலாக தலைவனான மென்ஷின்ஸ்கி மாரடைப்பால் மரணம் அடைந்தான். அப்போது துணைத் தலைவனாக இருந்த எக்கோடா தலைவனானான். இவ் எக்கோடா 1929 இல் டிரொட்ஸ்கிய சதிக் கூட்டத்தில் சேர்ந்து இருந்தது யாருக்கும் தெரியாது இருந்தது. இவன் டிரொட்ஸ்கிய குழு ஆட்சிக்கு வரும் என்று நம்பியதன் அடிப்படையால் மட்டும் அதில்

இணைந்திருந்தான்.
1934 இல் கிரோவ் கொலையாவதற்கு முன், கொலைகாரணான நிக்கோலயேவ், சோவியத் இரகசியப் பொலிசாரால் லெனின்கிராட்டில் கைது செய்யப்பட்டான். கிரோவ் ஒவ்வொரு நாளும் போய் வருகின்ற நடைபாதையைக் காட்டக் கூடிய படமும், துப்பாக்கியும் அவனிடம் இருந்தது. லெனின்கிராட் உதவித் தலைவனாக இருந்த சர்ப்பரோசெட்ஸ் எகோடாவுக்கு வேண்டியவன். எனவே நிக்கோலயேவ் விடுதலையானான்.
இந்த கொலையை மறைமுகமாக எகோடா செய்வித்ததுடன், தாங்கள் ஆட்சி அமைப்பின் அதில் எப்படியான அரசு அமைய வேண்டும் எனக் கூட திட்டமிட்டான். இதற்கு என விசேட இரகசிய இராசாயன சாலை ஒன்றை நிறுவினான். இதில் பல விஞ்ஞானிகளை உருவாக்கினான். இதுவும் அவனுக்கு திருப்தி அளிக்கவில்லை. வேறு நூதன வழிகளைச் சிந்தித்தான். இதற்கு டாக்டர்களைப் பயன்படுத்த திட்டமிட்டான்.
இதற்கு முதல் அவன் துணைத் தலைவராக இருந்த போது அதன் தலைவராக இருந்த மென்ஷின்ஸ்கியை கொல்லும் வழியில் டாக்டர் வேவினை அனுகினான். மென்ஷின்ஸ்கிக்கு வைத்தியம் செய்து வந்த வெவின் தனது திட்டத்துக்கு மிரட்டியும், பவ்வியமாகக் கதைத்தும் சம்மதிக்க வைத்தான். அவன் அவரிடம் 'சோவியத் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக இரகசிய இயக்கம் வளர்ச்சியுறுகிறது. அந்தத் தலைவர்களில் நானும் ஒருவன். அந்த எதிர்ப்பு இயக்கத்தவர்கள் தான் சோவியத் யூனியனின் ஆதிக்கம் வகிக்கப் போகிறவர்கள். நீங்கள் வைத்தியம் செய்து வருகிற தலைவர்கள் சிலரை, எங்கள் பாதையில் இருந்து விலக்கியாக வேண்டும்.' என்று எகோடா டாக்டர் வேவினிடம் கூறினார். இதை அவன் மறுத்த போதும் தற்காலிக தலைவர் முன் எதுவும் பலிக்காது எனக் கருதி அதற்கு சம்மதித்தான். மென்ஷின்ஸ்கிக்கு வைத்தியம் பார்த்த இன்னுமோரு டாக்டர் சசாக்கோல்வையும் பயன்படுத்தினான். இதன் தொடர்ச்சியில் வேவின், சசாக்கோ, எகோடாவின் உரையாடலைப் பார்ப்போம்.
வேவின்:- 'மென்ஷின்ஸ்கி நடைப்பிணம். உண்மையில் நீங்கள் நேரத்தை வீணாக்குகிறீர்கள்.'
வேவின்:- 'ஒரு விடையத்தப் பற்றி உங்களிடம் பேச வேண்டும்.'
சசாக்கோ:- 'எதைப்பற்றி'
வேவின்:- 'மென்ஷின்ஸ்கியின் உடல் நலத்தைக் குறித்து ...........'
வேவின்:- 'நீங்கள் மிகத் திறமையுள்ளவர் என எண்ணினேன். நீங்கள் இன்னும் என்னை அறிந்து கொள்ளவில்லை மென்ஷின்ஸ்கியை சற்றுக் குணப்படுத்தி இருக்கிறீர்கள். அவர் மீண்டும் வேலைக்கு போகாத படி செய்ய வேண்டும்.' ........
'மென்ஷின்ஸ்கி உண்மையில் ஒரு பிணம். அவரைக் குணப்படுத்தி திரும்பவும்

வேலை பார்க்கத் தகுதியுடையவராகச் செய்தால், எகோடாவின் கோபத்திற்கு ஆளாவீர்கள். மென்ஷின்ஸ்கி எகொடாவாவின் பாதைக்கு தடைக்கல்லாக இருக்கிறான். ............ இது பற்றி ஒரு வார்த்தை கூட மென்ஷின்ஸ்கியிடம் செல்லக்கூடாது. சொன்னால் எகொடா உங்களை அழித்து விடுவார். எங்கே போய் ஒழித்தாலும் அவரிடம் இருந்து தப்ப முடியாது. தலைமறைவாக இருந்தாலும் அவர் உங்களை விடப் போவதில்லை.'

நவம்பர் 6 1933இல் டாக்டர் சசாக்கோவை சந்திக்க எகொடா வந்தான்.

எகோடா:- 'மென்ஷின்ஸ்கி எப்படி இருக்கிறான்'

சசாக்கோ:- 'கவலைக்கிடமான நிலை'

எகோடா:- 'வேவினைச் சந்தித்து பேசினீர்களா'

சசாக்கோ:- 'ஆம் '

எகோடா:- 'அப்படியானால் ஏன் காலத்தை வீணாக்குகிறீர்கள். ஏன் வேலையை முடிக்கக் கூடாது? பிறர் காரியத்தில் நீர் ஏன் தலையிடுகிறீர்?'

கசாக்கோ:- 'நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுகிறீர்கள்'

எகோடா:- 'மென்ஷின்ஸ்கிக்கு உம்மை யார் வைத்தியம் செய்யச் சொன்னது.? அவன் உயிர் வாழ்ந்தால் யாருக்காவது பலன் உண்டா?அவன் எல்லோருக்கும் இடையூறாக இருக்கிறான்'

இதன் தொடர்ச்சியில் 1934 மே 10இல் மென்ஷின்ஸ்கியின் இதயத்தைப் பலவீனப்படுத்திக் கொண்றனர். இதே போன்று 1935 ஜனவரி 25இல் குயுபிஷேவ் அலுவலகத்தில் மாரடைப்பு ஏற்பட்டது. உடன் ஓய்வுக்கு அனுப்புவதற்கு பதில் மாக்ஸிமோவ் என்ற புகாரிய வாதி நடந்து வீடு செல்லும்படி கூறினான். குயுபிஷேவ் நடந்து வீடுபோய் சேர்ந்ததும் இறந்தார்.

சோவியத் 1936,37களில் விழித்துக் கொண்டது. உள்நாட்டு சதி மற்றும் 5ம் படையாகச் செயற்பட்ட இந்த சதியாளிகள் ஜப்பானுடனும், ஜேர்மனியுடனும் உள்ளகூட்டு என எழும்நிலைமையில், வரப்போகும் யுத்தத்தில் நாசமாக்கி சோவியத்தை சிதைத்து அழித்துவிடும் எனக்கண்டனர். இதன் தொடர்ச்சியில் விசாரணை முடக்கி விடப்பட்டன. சோவியத் விசாரணையைக் கட்டுப்படுத்த எகோடா எடுத்த முயற்சி அனைத்தும் வீணாயிற்று.

எகோடாவின் கையாளான போரிகோல் விசாரணைக்காக லெனின்கிராட்டுக்கு வரவேண்டுமென கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அவன் விசாரணைக்காக போகும் வழியில் கார் விபத்தில் இறந்தான். இதனைத் தொடர்ந்து 'மொஸ்கோ விசாரனை'கள் நடத்தப்பட்டன. பலர் கைது செய்யப்பட்டனர். செப்டம்பர் 27இல் எகோடா பதவியில் இருந்து நீக்கப்பட்டான். அவனுக்குப் பதில் எஷோல் என்பவர் நியமிக்கப்பட்டார்.

இவரை தன்வழிப்படுத்த எகோடா முயன்று தோற்றான். சிலர் கைது செய்யப்பட முன் தமக்குள் கூட கதைத்தனர். இதைத் தொடர்ந்து வெளியில் தெரியாத சிரஸ்டின்கிமிடம் சதிப் பொறுப்புக்களை ஒப்படைத்தனர். இவன் ரோசென்கொல்டீஸ் என்பவனைத் தனது துணைத் தலைவனாக்கினான். மாரிவுல்துக்காசெல்ஸ்கி என்பவர் சோவியத் பாதுகாப்பு இலாகா உதவிக் கமிசன், அவன் தலைமையில் இராணுவத் தாக்குதல் தொடங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது. (இதை தொழிலாளர் பாதை ஒத்துக்கொண்டுள்ளது)

ஜனவரி 23 1937இல் பயட்டக்கோவ், ராடெக், செக்கோஸ்நிக்கோல், ஷெஸ்டோவ், முரவோல், மற்றும் பன்னிரண்டு பேர் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர். விசாரணையின் போது அவர்கள் ஒரே விதமாக ஒரே விடயத்தை தனித்தனியாக கதைத்தனர். ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டினர். இவர்கள் தமது நிலையைச் சரியெனக் கூறி பிடிவாதமாக மீள மீள விவாதித்தனர். இந்த விசாரனை என்பது அவர்கள் மீது பொய்யாக திணித்துக் கூறியதாக காட்டப்பட்டு வந்த டிரொட்ஸ்கியக் கதைக்குப் பதில் எதிர்த்து வாதிட்டதுடன், தமது சதிகளை நியாயப்படுத்தினர். விசாரணையைப் பார்க்க வந்த எந்தப் பத்திரிகையாளரும் (உள்நாட்டு, வெளிநாட்டு) இதை பெய்யாக சோடிக்கப்பட்டுது என்று நம்பமறுத்தனர். அவர்கள் சதிகளை நியாயப்படுத்திக் கொளகை பிரகடனம் செய்தனர். (உ-ம்) பயாட்டக்கோவின் வாக்கு மூலத்தைப் பார்ப்போம்.

'ஆம் பல ஆண்டுகளாக டிரொட்ஸ்கிய வாதியாக இருந்து வருகிறேன். ஆனால் ஹெஸ் ஒப்பந்தத்தை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. நாங்கள் குருட்டுத்தனமாக நேச உடன்படிக்கை செய்து கொண்டோம். அதிலிருந்து விடுபட வழிதேடிக்கொண்டிருந்தேன். .....' (இங்கு ஹெல் ஒப்பந்தம் என்பது நாசிக்கட்சிக்கும், டிரொட்ஸ்கிய வாதிகளுக்கம் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தம்)

இன்னுமொரு டிரொட்ஸ்கிய வாதியான கார்ஸ்ராடெக்க தான் குற்றவாளி என்று ஒப்புக் கொண்டான். அவன் நாஜி ஜெர்மனியோடும், ஜப்பான் அரசோடும் டிரொட்ஸ்கி செய்த ஒப்பந்தம் தனக்குப்பிடிக்கவில்லை என்றும், அந்த சதியை வெளிப்படுத்த தான் உறுதி கொண்டிருந்ததாகவும், அவன் கூறினான்...........

அரசாங்க வக்கீல்:- 'என்ன முடிவுக்கு வந்தீர்'

ராடெக்:- 'கட்சியின் மத்திய கமிட்டிக்குப் போய் எல்லோருடைய பெயர்களையும் குறிப்பிட்டு, ஒரு அறிக்கை கொடுக்கலாம் என முதலாவதாக எண்ணினேன். அதை நான் செய்யவில்லை. நான் இரகசிய இலாகாவிடம் போகவில்லை. ஆனால் அது என்னிடம் வந்தது.'

அரசாங்க வக்கீல்:– 'திறமையான பதில்'
ராடெக்:– 'துக்கமாக பதில்'

இந்த விசாரணைபற்றி ஏகாதிபத்தியத் தூதரகம் என்ன தமது அரசங்கத்துக்கு அறிவித்தனர் என பார்ப்போம். அமெரிக்க தூதர் டேலிஸ் அரசாங்க செயலாளருக்கு 1937 பெட்டவரி 17 இல் எழுதிய கடிதம் 'மற்றோரு இராஜதந்திரி, மந்திரி ........ நேற்று மிகத் தெளிவாகச் செய்தியைச் சொன்னார்கள். விசாரணை பற்றி விவாதிக்கையில் பிரதிவாதிகள் குற்றவாளிகள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. விசாரனையைக் கவனித்த எல்லோரும் அதே முடிவுக்குத் தான் வந்தோம். வழக்கு சோடிக்கப்பட்டதென பத்திரிகைச் செய்தியிலிருந்து வெளியுலகம் எண்ணுகிறது. அது அப்படி அல்ல. என்பது அவருக்கத் தெரியும். ஆனால் வெளியுலகம் அப்படி நினைப்பது ஒருவகையில் நல்லது தான்.' என்ற அவரின் கருத்து கம்யூனிஸ்டுக்களுக்கு எதிரான அவதூறுகளைப் பாதுகாக்கும் நோக்கில் டிரொட்ஸ்கிய அவதூறுகளைக் கொண்டு கம்யூனிச எதிர்ப்பை பிரச்சாரம் செய்யும் நோக்கில் எழுந்ததே. ஆனால் உண்மையைத் தெரிந்தும் பொய்யை வரவேற்றார். விசாரணையையும் கைதுகளையும் கண்டு பயந்த டிரொட்ஸ்கிய நபர்கள் இராணுவத்தின் இறுதித் தாக்குதலை நடத்தத் தவறின் தற்கொலை செய்வது எனக்கருதி கிரஸ்டின்ஸ்கி, ரோசெக்கோலிட்ஸ், துக்காசெவ்ஸகி, கமார்னின் ஆகியோர் இரகசியமாக கூடியர். 1937 மே 1ம் திகதிக்க முன் இராணுவ நடவடிக்கையில் இறங்கி விடுவது என தீர்மானிக்கப்பட்டது. எப்படிக் கைப்பற்றுவது என்பது தொடர்பாக பல விவாதங்கள் நடந்தது. அவற்றில் துக்காசென்ஸ்கி வகுத்தது தான் சிறந்தது என பிற்காலத்தில் ரோசன்கோல்ட்ஸ் குறிப்பிட்டான். இச்சதி தொடங்க முன் சோவியத் இவர்களை கைது செய்தது. பலர் தண்டனைக்கு உள்ளானர். உலகில் பல புதிய வதந்திகள் பரவின. அதில் சிலவற்றைப் பார்ப்போம்.

'செஞ்சேனை சோவியத் அரசிற்கு விரோதமாக கிளம்பிவிட்டது', 'வரோவுவோவ: மஸ்கோவிற்கு படைஎடுத்துச் செல்கிறார்', 'சோவியத் ரஷ்சியா முழுவதிலும் மக்கள் சுட்டுத் தள்ளப்படுகிறார்கள்', 'சிறந்த தலைவர்களை செஞ்சேனை இழந்து விட்டால் அது சர்வதேசிய முக்கித்துவம் வாய்ததல்ல.' எனப்பல வதந்திகள் பரவின. இதே நேரம் சோவியத் அமெரிக்கத் தூதர் டேசிஸ் 1937 யூலை 4இல் சோவியத் வெளிநாட்டு அமைச்சர் மாக்சிம் விட்லினோவை சந்தித்தார். அப்போது டேலிஸ் கூறினார்.

'மஸ்கோ விசாரனை டிரொட்ஸ்கிய வாதிகளுக்க்கும், சில சேனைத் தலைவர்களுக்கும் கொடுக்கப்பட்ட தண்டனை அமெரிக்காவில் பரபரப்பை உண்டாக்கியுள்ளது.' எனத் தெரிவித்தார். அதற்கு சோவித் வெளிநாட்டு அமைச்சர் மாக்சிம் விட்லினோஸ் 'துரோகச் செயலிலிருது சோவித் அரசை நாங்கள் பாதுகாத்தோம். என்ற உண்மையை என்றாவது

ஒரு நாள் உலகம் அறியும். நாஜி கிட்லர் ஆபத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக, சோவியத் யூனியனை மாபெரும் கோட்டையாக்குகிறோம். அதன் மூலம் எங்களுக்குள்ள ஆபத்தைத் தவிர்ப்பது மட்டுமல்ல, நாஜியின் உலக ஆதிக்க வெறியை எதிர்த்து தாக்குவதன் மூலம், உலகத்திற்கு சிறந்த தொண்டாற்றுகிறோம்' என்று பதிலளித்தார். இதிலிருந்து டிரொட்ஸ்கி மீதான நடவடிக்கை பாசிசத்திற்கு துணைபோய் பாசிசத்தை பலப்படுத்திய டிரொட்ஸ்கியத்தின் மீதான தாக்குதலாக இருந்தது என்பது உண்மையாகி உறுதியாகியுள்ளது.

அன்றும் இன்றும் டிரொட்ஸ்கிய வாதிகளும், ஏகாதிபத்தியங்களும் ஒரோ மதிரி, ஒரோ விதமாக ஸ்ராலினையும், கம்யூனிஸ் கட்சியையும் தாக்கி வரும் ஒரு வெறுப்பான அரசியல் மூலவுபாயத்தை கொண்டது அறிந்ததே. பலர் அப்படி பரஸபரம் மாறி மாறிக் கூறிக் கொண்டனர். இருந்த போதும் அண்மைய தொழிலாளர்பாதை முதன் முதலில் சதி நடந்த சிலவற்றை ஒத்துக் கொண்டுள்ளது. ஆனால் அது தம்மை நியாயப்படுத்தும் நோக்கில் எழுந்ததே.

இனி இவர்கள் நிரந்தரப்புரட்சி எனக் கூறிக் கொண்டு இன்று மீள மீள கூறுவதைப் பார்ப்போம். நிரந்தரப் புரட்சிக்கு தத்துவத்தை முதன் முதலில் கண்டு பிடித்தவர் மார்க்ஸ் ஆவார். அதைப் பின் திரித்து எழுதிய டிரொட்கி அதன் உள்ளார்ந்த அர்த்தத்தையே மாற்றி, அதன் திரிந்த வடிவமே இன்று டிரொட்கிய வாதிகளால் மீள மீள முன்தள்ளப்படுகிறது.

1850 இல் மார்க்ஸ் கம்யூனிஸ்ட் லீக்கில் பேசியபோது நிரந்தரப் புரட்சி பற்றி கூறியது என்ன? எனப்பார்ப்போம்.

«மேலே குறிப்பிட்ட கேள்விகளில் கூடுமானவரை எல்லாவற்றையும் பெற்றவுடன் எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் புரட்சியை முடித்துவிட ஜனநாயக மனப்பாண்மையுள்ள மத்தியதர வர்க்கம் விரும்பும். ஆனால் நம் நலன்களும், கடமையும் அந்தப் புரட்சியை நிரந்தரமானதாக ஆக்குவதில் தான் அடங்கியுள்ளது. உடமை வர்க்கங்கள் யாவும் ஆதிக்கப்பீடத்தில் இருந்து வீழ்த்தப்படும் வரையில், தொழிலாளர் வர்க்கம் அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றும் வரையில் ஒரு நாட்டுக்கு மட்டுமல்லாமல் உலகில் முக்கியமான நாடுகள் அனைத்திலும் தொழிலாளர்களுக்கிடையில் போட்டி இல்லாதவாறு செய்து, பிரதான பொருளுற்பத்தி சக்திகள் யாவும் தொழிலாளிகளின் கையில் திரண்டு சேரும் நிலை உண்டாகும் அளவுக்கு தொழிலாளர்களின் கூட்டுறவு முன்னேறும் வரையில் புரட்சி நீடித்து நடத்தப்பட வேண்டும்» என்று மார்க்ஸ் குறிப்பிடும் நிரந்தரப் புரட்சிக்கு முன் தொழிலாளர்கள், மற்றும் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் கூட்டு அரசாங்கத்தை அமைப்பதன் மூலம்,

புரட்சியைத் தொடங்கி, பின் நீடித்த புரட்சியின் ஊடாக படிப்படியாக தொழிலாளர் வர்க்கம் ஆட்சியை நிரந்தரமாக்க வேண்டும். இது தொழிலாளர்கள் அல்லாத மற்றைய ஒடுக்கப்பட்ட பிரிவுகளை உள்ளடக்கிய ஆட்சியில் நடக்கும் உள்ளான புரட்சியின் ஊடாக தொழிலாளர் வர்க்க ஆட்சியை நிறுவுவதேயாகும். டிரொட்ஸ்கி இதைத் திரித்து தொழிலாளர் வர்க்க ஆட்சியை நிறுவுவதில் தொடங்கும் நிரந்தரப் புரட்சியை முன்தள்ளியதன் மூலம், புரட்சிக் கூறுகளையே சிதைத்தனர். சோவியத்தில் தொழிலாளர், விவசாயிகளின் கூட்டுத் தலைமையை நிராகரித்து, தொழிலாளர் தலைமைய மட்டும் முன்வைத்து விவசாயிகளை எதிர் நிலைக்க தள்ள முனைந்நதுடன், இடது விலகலை முன்தள்ளினார்.

இன்று இதே டிரொட்ஸ்கிய சக்திகள் நிரந்தரப் புரட்சி என்ற மார்க்ஸின் சரியான விளக்க உரையை திரித்த வடிவில் கொண்டு விவசாய வர்க்கத்தில் போர்குணாம்சத்துடன் கூடிய தொழிலாளர் வர்க்கத்துடன் கூட்டுச் சேரும் புரட்சிகரப் பாத்திரத்தை மறுதலிக்கின்றனர். ஆகவே இன்று நிரந்தரப் புரட்சி என்ற டிரொட்ஸ்கிய கோட்பாடு மார்க்ஸிற்கு விரோதமாக திரித்த வடிவம் மட்டுமே உள்ளது என்பது மிகக்கவனத்துக்கு உரியது. இதை லெனின் 'சமூக ஜனநாயகத்தின் இரண்டு போர் தந்திரங்கள்' என்ற நூலில்

«நிகழ்ச்சிகள் எல்லாம் நாம் கூறியபடியே நிகழ்ந்திருக்கின்றன. புரட்சி நடந்தேறியிருக்கும் போக்கு நாம் பகுத்தாராய்ந்து முற்றிலும் சரி என்று ஊர்ஜிதம் செய்திருக்கின்றது. முதலாவதாக மன்னர் ஆட்சியையும், நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்தையும், மத்திய கால ஆட்சி முறையையும் எதிர்ப்பதற்கு விவசாய மக்கள் 'அனைவரையும்' அனைத்துக் கொண்டு புரட்சி முன்செல்லும். (அந்த அளவுக்கு, புரட்சி முதலாளியத் தன்மை வாய்ந்ததாக, முதலாளிய வர்க்க ஜனநாயகத் தன்மை வாய்ந்ததாக இருக்கிறது.) அதன் பிறகு சீமைப் பணக்கார விவசாயிகள், குலாக்குகள், லாப கொள்ளைக் காரர்கள், முதலியர்களை உள்ளிட்டு முதலாளித்துவதை எதிர்ப்பதற்காக ஏழை விவசாயிகள், அரைத் தொழிலாளியாக மாறியிருக்கும் ஏழைவிவசாயிகள், எல்லா சுரண்டப்பட்ட மக்கள் அனைவரையும் அணைத்துக் கொண்டு புரட்சி முன் செல்லும். இந்தளவுக்கு புரட்சியானது சோசலிசத் தன்மை வாய்ந்ததாக ஆகிறது. முந்தியதற்கும் பிந்தியதற்கும் இடையே ஒரு பெரிய மதில் சுவரை எழுப்பி பிரிக்க முயற்சிப்பது இரண்டு புரட்சிகளுக்குமிடையே ஒரு இடைக்காலம் தேவைப்படுவதும், தேவைப்படாததும் தொழிலாளர் வர்க்கம் இரண்டாவது கட்டத்துக்குப் பாய்வதற்கு எந்தளவுக்கு ஆயத்தமாகிறது என்பதையும், ஏழை விவசாயிகளுடன் எந்தளவுக்கு ஒற்றுமையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதையும் மட்டுமே பொறுத்திருக்கும் என்பதைப் பாராமல், வேறெந்தக் காரணத்துக்காகவும் முதலாவது, இரண்டாவது

கட்டங்களுக்கிடையிலே ஒரு இடைக்காலத்தைக் காண முயற்சிப்பது மார்க்ஸியத்தை கோணற்படுத்தித் திரித்துக் கூறுவதாகும், கேவலப்படுத்துவதாகும், மார்க்ஸியத்துக்குப் பதிலாக முதலாளிய மிதவாதத்தை நிலைநாட்டுவதாகும்.' என லெனின் நிரந்தரப் புரட்சி வேலைத்திட்டத்தின் அடிப்படையை அம்பலப்படுத்தி உள்ளார். இதேபோல் மேலும் பல மேற்கோள்களையும், டிரொட்ஸ்கிய சக்திகளையும் கட்டுரையில் தொடர்ந்து தரமுடியும். ஆனால் இது ஒரு சிறு கட்டுரை என்பதால் இதற்கு மேல் கூறுவதை தற்காலிகமாகக் கைவிடுகிறோம்.

இன்று டிரொட்ஸ்கிய கட்சிகள் சொந்த பலவீனத்துக்கு உள்ளாகி, வரலாற்றை மறைக்க முயன்று தோல்வி பெற்று, அங்கொன்று இங்கொன்றாக புலம்பியுள்ளன. மார்க்ஸியத்தை மறுத்து வாதிடும் இவர்கள் சொந்த அரசியல் வங்குரோத்துக்குள் சிக்கி, ஒரு வேலைத் திட்டத்தை முன்வைக்க முடியாது போய்யுள்ளதுடன், இந்த ஜனநாயகமற்ற அரசுக்குள் தேர்தலில் போட்டியிட்டு, புரட்சிக்கு எதிராக செயல்படுகின்றனர் என்பது வரலாற்று உண்மை.

